# ஒளிர்வு

## அருட் சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் அவர்களின் சேவைச்சிறப்பு மலர்




**யா/திருக்குடும்ப கன்னியர் மடம்,**
**யாழ்ப்பாணம்**

# ஒளிர்வு

**அகவை அறுபதின் நிறைவில் ஓய்வு பெறும்**

**அருட்சகோதரி மேரி தஸ்னெவிஸ் லடிஸ்லாஸ் அவர்களின்**

## சேவைச்சிறப்பு மலர்

J/HOLY FAMILY CONVENT LIBRARY ... SCHOOL JA

**வெளியீடு**

யா/ திருக்குடும்ப கன்னியர் மட சமூகம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர்,
அபிமானிகள்

ஒளிர்வு : அரு.சகோ.மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் அவர்களின் சேவைச் சிறப்பு மலர்

காலம் : 25.05.2011

வெளியீடு : யா/ திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலைச் சமூகம்

நூலாக்கக்குழு : செல்வி மே.பூ.பெனடிக்ற்
திருமதி ஜே.ஸ்ரீஸ்கந்தராஜா
திருமதி பு.திருஞானசம்பந்தன்
திரு.ரவீந்திரன்
திரு.யோ.யோண்சன் ராஜ்குமார்
திரு.ம.மாறோமக்ஸன்
திரு.லிகோரியன்
திரு.கே.என்.கனகரட்டினம்

அச்சுப்பதிப்பு : கரிகணன் பிறிண்டேர்ஸ்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கம் : 69

"ஒளிர்வு" என்னும் பெயர் தாங்கி வெளிவரும் இந்நூல் எமது பாடசாலையில் 7 வருடங்கள் அதிபராகச் சிறப்புடன் பணிசெய்த அருட்சகோதரி மேரிதஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் அவர்களின் சேவை நலனோதும் மலராக வெளிவருகின்றது. அவரது பணியின் சிறப்புக்கு இம்மலர் சான்று பகரும் என நம்புகின்றோம்.

- மலர்க்குழு

# பொருளடக்கம்


1) யாழ் ஆயரின் ஆசிச்செய்தி 05

2) Message from Re.Fr.Justin 06

3) Provincial's Message 08

4) வாழ்த்துச் செய்தி - அருட்திரு ஆர்.எச்.சகாயநாயகம் 09

5) தலைசிறந்த முகாமையாளர் - வே.தி.செல்வரெத்தினம் 11

6) ஆளுமையின் அதிபதி - திருமதி அ.வேதநாயகம் 12

7) ஆன்மீகத்துடன் இணைந்து.... திருமதி வ.சிவபாலன் 13

8) செஞ்சொற் செல்வரின் ஆசியுரை 14

9) அருட்சகோ.மேரிதஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் - வாழ்க்கைக்குறிப்பு 15

10) இறைபக்தியும் தலைமைத்துவமும் - அருட்திரு க.யேம்ஸ்சிங்கராஜர் 18

11) வாழ்த்துப்பாமாலை - கலாநிதி செ.திருநாவுக்கரசு 19

12) முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி 23

13) பல்துறை ஆளுமை மிக்க அதிபர் - ந.வன்னியசிங்கம் 25

14) தனக்கென வாழாத்தலைவி - திருமதி சித்ரா இராஜரட்ணம் 27

15) பாடசாலையின் உயர்வுக்கு உரமான அதிபர் - திருமதி அச்சதம்பிள்ளை 32

16) சேவையை வியந்து - திருமதி எஸ்.அற்புதக்குமார் 34

17) பாராட்டுச் செய்தி - கே.என்.விந்தன் கனகரத்தினம் 36

18) Message form Australia O.G.A 37

19) Message from Canada O.G.A 38

20) Message from U.K. O.G.A 39

21) Message - St.Patrick's College 40

22) மாணவர் போற்றிடும் மாண்புமிகு அதிபர் - திருமதி டி.துஷிதரன் 41

23) Note of Appreciation - Mrs.K.Ponnampalam 42

24) ஆளுமைமிக்க அதிபர் - ஓங்காரமூர்த்தி 43

25) Message of felicitation - Re.Sr.Jeevanthi 44

26) பிரியாவிடை நாயகிக்கு - திருமதி மேரி டி.யூட்டிரவிநாத் 45

27) முகவரி தந்தவர் - செல்வி மே.பூ.பெனடிக்ற் 47

28) பல்லாண்டு வாழ்க - யோ.யசோ 50

29) மணிவிழாக்காணும் அதிபர் - திருமதி ப.ஜெ.பற்றிக் 51

30) உன்னத உயர்வை நோக்கிய உழைப்பு - திருமதி ஸ்ரீஸ்கந்தராசா 52

31) எமது அதிபர்- செல்வி. யசோதா யோகேஸ்வரி 55

32) பிரியாவிடை கொடுங்கள் - கனுஜா அன்ரனி 56

33) கவிதைக்கே ஒரு கவிதை - அ.ஜெலானி 58

34) அதிபர் தாயே வாழியவே - J.டயானா 60

35) We Love and Thank you - 11A Students 61

36) From my Heart - K.Mary Sugeepa 65

37) இயலாமையில் வருந்துவோருடன் - நலன்புரிக்கழகம் 66

38) வாழ்த்துப்பாமாலை - பாடசாலைச் சமூகம் 67

39) விடை தந்து வாழ்த்துகிறோம் 69

70) நன்றி 70




அருட் சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ்

(B.A., Dip. in. Edu., M.Phill in Edu., SLPS 2:I)

## யாழ். ஆயரின் ஆசிச் செய்தி

அழியாச் செல்வமாகிய கல்விச்செல்வத்தை வழங்குபவர்கள் இறைவனுக்கு ஏற்ற பணியாற்றுகின்றனர். அருட்செல்வி. தஸ்நெவிஸ் கல்வி கேள்வியில் பாண்டித்தியம் பெற்று, கடந்த 23 வருடங்களாகப் பாடசாலை கல்வியின் மூலம் சிறந்த பணி ஆற்றி, கல்வி பணியில் இருந்து ஓய்வு எடுக்கும் வேளை அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எம் மறைமாவட்டத்தின் பல்லிடங்களிலும் தனது கல்விச் சேவையை ஆற்றி இருக்கிறார். தமது பணியின் போது பிள்ளைகள் மேல் மிகவும் அக்கறை உள்ள அதிபராக, பெற்றோருடன் தொடர்பாடலை ஏற்படுத்தி பாடசாலை உயர்வுக்காக நீடித்து உழைத்திருக்கிறார். குறிப்பாக பிள்ளைகளின் விசுவாசத்தைத் தூண்டி அவர்களின் ஆன்மீக, ஒழுக்க வாழ்வில் முன்னேற பல வழிகளில் ஈடுபட்டுள்ளார். அவர் தமது கல்விப்பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்தும் மக்கள் மத்தியில் பணியாற்ற இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ். ஆயர்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

# Message from
# Revd.Fr.Justin B.Gnanapragasam

I understand that Revd. Sr. Mary Nevis Ladislaus will be retiring from her teaching profession in February 2011. I have known her for more than thirty years and I have admired her sense of dedication and devotion to duty, be it in the religious or in the educational field. As a Nun of the Holy Family Congregation, she took the vows to be religious in 1972 and had served in various capacities before entering the formal educational arena. She started her teaching profession at Pulopalai RCTMS in 1987 and has served, up to now, with great love for the children.

Being a Principal from 1993, Sr. Nevis had to shoulder great responsibilities as the situation in the North began to change dramatically with displacements of people and, of course, the school. She served the Holy Family Convent Jaffna too, at a time when things were very volatile and the war had escalated to greater heights. With great determination she carried on her work of serving the children, though there were times when she was not understood by the higher authorities. The desire to serve the children, to give them a better education, was the uppermost in her mind always. Moreover, with her religious background she was able to give confidence to the children and guide them in their faith. During her period of Principalship the school achieved many awards and was raised to the level of a National School.

Even though Sr.Nevis is retiring, we all know that she laid foundation for the Holy Family Convent to reach greater heights. I take this opportunity to thank God for the many graces he had bestowed on Sr.Nevis and pray that she be given enough courage and strength to continue her work of spreading the kingdom of God wherever she is placed to serve.

"What does the Lord your God ask of you but to fear the Lord your God, to walk in all his ways, to love him, to serve the Lord your God with all your heart and with all your soul..". Dueteronomy 10 :12

***Revd. Dr.Justin B.Gnanapragasam***
*Vicar General Jaffna Diocese*
*17 January 2011*

# Provincial's Message

It gives me great pleasure to have this opportunity to express my sincere thanks and appreciation of the dedicated services rendered by Sr.Nevis to the J/Holy Family Convent during her tenure -ship as principal in this school.

She has continued to uphold the aim, objectives and principles maintained for more than 150 years. She has been vigilant and through her heroic zeal, deep faith and trust in God's guiding power, has instilled the values lived by our early Mothers in the hearts and minds of our students of today . It was not an easy task and she had to face many challenges in all spheres but she held on to the storng Christian traditions left by the predecessors of this school. She was able to get the support and collaboration of her staff in helping the students to achieve high levels in their education, sports and extracurricular activities. She was a good disciplinarian and maintained good discipline in the School and encouraged the students to witness to it outside school hours too.

Her enterprising qualities have stood her in good stead to launch out on new projects that have helped the students and staff to gain more experience of student and staff life in the neighbouring subcontinent of India .

Her untiring and committed service was rewarded with the school being raised to National Level during her term as its Principal.

Inspired by our Lord Jesus and His missio, she has reached out with compassion and courage to the poor and suffering peole of the Vanni district and very discreetly has helped many poor students and families to come up in life.

I wish her all the best for future mission and may she enjoy peace, contentment and freedom , having fulfilled the heavy demands of running a prestigious National School in this 21st century with its rapid changes, fast developments,unending questions and its intense search for meaning and fulfillment. God be with you dear Sr. Nevis.

***Sr. Youlande Mathias,***
*The Provincial,*
*Holy Family Congregation,*
*Jaffna Province.*

# Message from the Principal

I am indeed delighted to give my message of tribute in praise of the untiring and devoted service of Sr. Thusnevis Ladislaus who has been principal of J / Holy Family Convent for the past seven years.

Sr. Nevis graduated from the Jaffna University achieving a first class in BA, her Post Graduate Diploma in Education at the National Institute of Education, Maharagama and finally obtained an M. Phil in the Jaffna University. Gifted with intelligence, clear vision, dynamism and conviction, she has distinguished herself as a committed educator of our youth.

As head of J/ Holy Family Convent she has kept at heart the high traditions of this Institution and has made immense efforts to form the young generation imparting to *them integral* and *quality formation in good conduct, discipline,* knowledge and spirituality, so that they become responsible citizens and leaders. Her foresight, good judgment and determination in this field of education cannot be easily forgotten.

The school development was fast during her tenure in the fields of knowledge, aesthetics, sports, drama and culture, participating in inter - school competitions at zonal, provincial and national levels, thus enhancing the status of the institution. She also maintained good contacts with the past pupils of the school and enlisted their whole hearted collaboration to promate the educational standard of the students: slow learners were helped through private tuitions, the physics laboratory was developed and a computer section was installed - to mention a few of the projects carried out with their financial support.

Sr. Nevis, deeply rooted in the spirit of God Alone that nurtures and energizes the Holy Family Congregation, has been able to face the many challenges she encountered in her teaching career with faith, wisdom and courage. In this way she has steered the school family in the path of truth, justice and charity. Even though she completes her teaching career now with success and fame, I hope and pray that with God's unfailing help, Sr. Nevis will continue to serve our people with love God's everlasting arms uphold you always.

***Sr. Thayanayahi Sebamalai,***
*The Principal,*
*J / Holy Family Convent, Jaffna.*

# வாழ்த்துச் செய்தி

யாழ். வரலாற்றில் சிறப்புப்பெற்ற திருக்குடும்ப கன்னியர் பாடசாலையானது ஆயர் றொமேறோவினுடைய வேண்டுகோளுக்கமைய போடோவின் திருக்குடும்ப சபையினால் பெண் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி கொடுக்க 1862ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை சிறந்த கல்விமான்களை உருவாக்கி, அவர்கள் உலகின் பல பாகங்களில் சிறப்பாகச் செயற்படுவதைப் பார்க்கின்றோம்.

அத்தகைய பெயர் பெற்ற பாடசாலையில் 4ஆவது சுதேச அதிபராக ஏழு ஆண்டுகள் அரும்பெரும் பணியாற்றி ஓய்வு பெறும் அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லோஸ்சின் பணிகளை மனமார பாராட்டி 60 அகவையின் நிறைவில் அவரை வாழ்த்தி நிற்கின்றோம்.

இவரின் காலத்திற்கு முன் தூரநோக்குடன் தமிழ் கன்னியர் பாடசாலை ஆங்கில கன்னியர் பாடசாலையுடன் இணைக்கப்பட்டது. இம்மாற்றம் பல சவால்களைத் தந்தாலும், கால ஓட்டத்தில் நல்ல உயர்ச்சிகளையும் வெற்றிகளையும் தந்துள்ளது. அவற்றில் சிறப்பானது என்னவென்றால் தேசியப் பாடசாலையாக இப்பாடசாலை 2010 ஆண்டில் உயர்த்தப்பட்டமை ஆகும். இது அதிபர் அருட்சகோ. நெவிசிற்கு பெருமை சேர்க்கின்றதென்றால் அது மிகையாகாது.

தன்னகத்தே தனக்கே உரித்தான ஆளுமையும், நல்ல குரல்வளமும், பரந்த அறிவும், ஆழமான கருத்துக்களை அள்ளி வழங்குபவராகவும் விளங்கினார். தன்னுடைய முழுக் காலத்தையும் நேரத்தையும் பாடசாலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணத்தோடு இரவு பகலாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் வளர்ச்சிக்கான விடயங்களை காலந்தாலோசித்து செயற்படுத்தியவர்.

அவரின் அணுகுமுறைகள் வெளிப்பார்வைக்கு கடினமாகத் தோன்றினாலும் உண்மையிலே மாணவர்களின் கல்விக்கும், நல்வாழ்விற்கும் அடிகோலாகவே இவை அமைந்து இருப்பதை யாவரும் அறிவர். அவரின் ஒழுக்கக் கட்டுக்கோப்பும் ஆசிரியர்களிடத்தில் வைத்திருந்த எதிர்பார்ப்பும், பார்வைக்கு கடினமாகவிருந்தாலும் அனைத்து மாணவர்களின் நன்மைக்கே என்பது புரியும்.

பாடசாலை வளாகத்திற்குள் நுழைந்த எல்லாப் பிள்ளைகளும் என்னுடைய பிள்ளைகளே என்ற உணர்வும், மிகுந்த பொறுப்பும், கண்டிப்பும், கரிசனையும் உடைய அதிபராக, தாயாக செயற்பட்டார். பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியிலும் கல்வி கடந்த செயற்பாடுகளிலும் (extra curricular activities) மிகவும் அக்கறையுடன் உழைத்தார்.

தலைமைத்துவப் பாசறை, கல்விசார் சுற்றுலா நிகழ்வுகள், கருத்தரங்குகளின் ஊடாகப் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்கும் ஆற்றலுக்கும் மெருகூட்டினார்.

விளையாட்டுத்துறையிலும் பிள்ளைகளின் திறமைகளை இனங்கண்டு உற்சாகப் படுத்தினார். மாகாண ரீதியில் பல போட்டிகளில் பங்கேற்று, கூடைப்பந்து விளையாட்டில் மாகாண ரீதியான சம்பியனாக உயர்வடைந்தது இவரின் காலத்திலேதான். ஆங்கில அறிவு குன்றிய இக்காலத்தில் அதை வளர்க்க அரும்பாடுபட்டார். ஐந்து ஆங்கில சொற்களை கற்கும் திட்டத்தை பாடசாலையில் அமுல்படுத்தி அதில் வெற்றியும் கண்டார். காலை ஒன்றுகூடல் வேளையில் சிந்தனைகள், வழிபாடுகளினூடாக ஆசிரியர்களும் மாணவர்களும் ஆங்கிலத்தில் நடாத்துவதை ஊக்குவித்து அவர்களின் ஆங்கில அறிவை வளர்க்க உற்சாகப்படுத்தினார். ஆங்கில நாடகங்களை ஊக்குவித்து, மாகாண மட்டங்களில் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியும் கண்டார். அதன் பயனாக தேசிய மட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்பும் கிடைத்தது.

ஏழைப்பிள்ளைகளின் கல்வியிலே அக்கறைகொண்டு இலைமறைகாயாக பல உதவிகளைச் செய்து, அவர்களின் உயர்ச்சியிலே பெரும் பங்காற்றியுள்ளார். பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சியிலும் அக்கறைகொண்டு அவர்களுக்குரிய திருப்பலிகள், வழிபாடுகள் கொடுத்து வழிநடத்தியுள்ளார். அவரின் இன்னுமொரு சிறப்பம்சமாக சமூக உணர்வு கொண்டவராக வாழ்ந்தார். நம்மைச் சூழ்ந்துள்ள பிரச்சனைகளைக் கண்டும் காணாதவராக இல்லாமல் மாணவர்களின் உதவியுடன் உடனடி நிதி திரட்டுவதிலும், மாணவர்களை சமூகப் பிரச்சனைகளை உணரச் செய்வதும், ஈடுபடச் செய்வதும் இவரின் தனிப்பட்ட கரிசனையே.

கல்வி உலகிலே 23 ஆண்டுகள் பணியாற்றி இன்னும் 17 ஆண்டுகள் அதிபராக வெவ்வேறு பாடசாலையிலும் சிறப்பாக 7 ஆண்டுகள் திருக்குடும்ப கன்னியர் பாடசாலையில் நற்பணியாற்றி, ஓய்வு பெறும் அதிபரை அவரின் சேவைக்காக வாழ்த்தி, அவரின் ஓய்வு பெறும் காலத்தில் கல்விப் பணிகளையும் மறைப்பணிகளையும் செய்து வளமுடன் வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட் திரு.ஆர்.எச். சகாயநாயகம்,**
பேராலயப்பங்குத் தந்தை
யாழ்.பேராலயம்.

# தலைசிறந்த முகாமையாளர்

அருட்சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லோஸ் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர். அவர் ஆரம்ப இடைநிலைக் கல்வியை பிரபல்ய பாடசாலைகளிற் பெறவில்லை. எனவே அவர் பட்டம் பெறுவதற்கு இப் பாடசாலைகளின் பங்களிப்பு சிறப்பானது. எனவே இவர் ஒரு சிறந்த மாணவியாக இருந்துள்ளமை தெரிய வருகின்றது. ஒரு சிறந்த மாணவியாக இருந்தமையால் கற்றல் நுட்பங்களை அறிந்துள்ளார். இதனால் இவர் ஒரு சிறந்த ஆசிரியையாகக் கடமையாற்றியுள்ளார். எனவே தன்னைப் போல் தான் கற்பித்த, முகாமை செய்த மாணவர்களும் கல்வியிற் சிறப்புற வர வேண்டும் என்பதற்காக தனது கற்பித்தல் நுட்பங்களுடன் சிறந்த முகாமை நுட்பங்களையும் அறிந்து ஒரு சிறந்த முகாமையாளராகக் கடமையாற்றியுள்ளார். மிகவும் இறுக்கமான முகாமையாயினும் நெகிழ்ச்சியான, அன்பான மனத்தையுடையவர். இதனால் இவர் அதிபராக இருந்த யா/திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் கலைத்திட்ட பெறுபேறுகளுக்கும் இணைப்பாட விதான செயற்பாட்டிற்கும் காரணமாக இருந்தார் என்பதில் ஐயமில்லை. இவர் காலத்தில் சிறப்பான ஒரு பெறுபேறாகச் சாதனையாகக் குறிப்பிடக்கூடியதாக ஆங்கில மொழி மூலம் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவரும் க.பொ.த (உயர்தரம்) கற்க தகுதி பெற்றதுடன் ஒரு மாணவி சகல பாடங்களிலும் விசேட சித்தி பெற்றார். அவரது துறவறப்பணி, கல்விப்பணி என்பன போற்றுதற்குரியது. கல்விப் பரம்பரையிலிருந்து வந்தமையாலும் குருத்துவக் கல்வியும் அவரைச் சிறந்த அதிபராக்கியுள்ளது என்றால் மிகையாகாது. ஓய்வுக் காலத்தில் சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் தனது துறவறப்பணியுடன் கல்விப் பணியும் ஆற்ற எனது பிரார்த்தனைகள்.

**வே.தி. செல்வரத்தினம்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

# ஆளுமையின் அதிபதி

மாறும் உலக நியதிக்கேற்ப மாற்றம்பெற வேண்டிய மனிதனின் ஆன்மீகத் தேடலிற்கான வழிகாட்டியாகப் பணிசெய்யத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, எதிர்கால சிறார்களின் உன்னத வெற்றிக்காக உழைக்கும் அருட்சகோதரி மேரி. தஸ்நெவிஸ் லடீஸ்லாஸ் சேவையிலிருந்து ஓய்வுபெறும் வேளையில் அவரைப் பாராட்டுவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இவரை நான் நல்ல முகாமையாளராகக் கண்டேன். இன்றைய வேக உலகத்தில் சிக்கி தடுமாறும் ஆசிரிய, மாணவர்களைத் கற்றல் - கற்பித்தல், பண்பாடு - ஒழுக்கம் பேணல் ஆன்மீக தேடல் என்பவற்றில் முழுமையான ஈடுபாட்டோடு வாழவைப்பதற்காய் தன்னுள் இருக்கும் பாசம், அன்பு, இரக்கம், கருணை போன்ற மென் தன்மைகளை நிர்வாகி என்ற போர்வைக்குள் மறைத்து வைத்து பாடசாலையை நேர் நோக்கோடு வழிநடத்திச் சென்றவர்.

மாணவ, ஆசிரியரின் சுயமதிப்பைக் கட்டியெழுப்பி மாணவரின் அடிப்படைத் திறன்களை வெளிக்கொணர்ந்து வளங்களை முறையாகக் கையாண்டு தர உறுதிப்பாட்டோடு கூடிய பண்புசார் விருத்தியை ஏற்படுத்த இவரது வழிகாட்டுதல் வழியமைத்துக் கொடுத்தன. இதனால் மாணவரின் பல்கலைக்கழக அனுமதி இவரது காலத்தில் 40 ஆக உயர்ந்தது. க.பொ.த. (சா/த) ஆங்கில மொழி மூலமான முதலாவது பெறுபேறு 9A என நிமிர்ந்தது. கூடைப்பந்தாட்டம் தொடர்ச்சியாக மாகாண மட்டத்தில் 7 வருடங்கள் வெற்றிவாகை சூடி தேசிய மட்டத்தில் பங்குபற்றியது. தமிழ், ஆங்கில நாடகங்கள் தேசிய மட்டத்தில் முதலிடங்களைப் பெற்று சாதனை படைத்து எம் வலயப்பாடசாலை என எம்மைப் பெருமைப்படுத்தியது.

இச்சாதனைகளினால் இவரின் உழைப்பின் பெறுபேறாய் பாடசாலை தேசிய பாடசாலையாக தரமுயர்ந்து இவரின் கட்டுக்கோப்பான முகாமைத்துவம், ஆங்கில மொழிவிருத்தி, ஆளுமை நிறைந்த தலைமைத்துவம் நிறைந்த மாணவ உருவாக்கம், வினைத்திறன் மிக்க ஆசிரிய செயற்பாடுகள் மூலம், சமூக நிறுவனமான உயர் நிலையமாக திருக்குடும்ப கன்னியர் மடத்தை நடாத்திச் சென்றவர்.

இன்றைய சூழலில் பிள்ளைகளை வழிநடத்தத் தடுமாறும் பெற்றோர் தம் மாணவரை திருக்குடும்பத்தில் இணைக்க முற்படுவதால் மாணவர் தொகை 1673 ஆக அதிகரித்தது. இவையெல்லாம் நிதர்சனங்களாக இருக்கும் வேளை சேவை நிறைவு செய்யும் காலம் வந்து ஓய்வு பெறுவது கல்விச் சமூகத்திற்கும் எமது வலயத்திற்கும் ஈடு செய்ய முடியாத இடைவெளியாகும்.

தன் ஓய்வு நெருங்கும் வேளையிலும் ஆங்கிலப் புலமையுள்ள மாணவிகளோடு புதுடெல்லி சென்று திரும்பித் தன் வாழ்வின் அர்ப்பணிப்பின் ஒவ்வொரு நிமிடங்களையும் அர்த்தமுள்ளதாக்கிய இவர், ஓய்வு காலத்திலும் பல்வேறு சேவைகளை வழங்க, உடல் ஆரோக்கியத்தோடு மகிழ்வோடு இருக்க வாழ்த்துகின்றேன்.

**திருமதி அ. வேதநாயகம்**
கல்விப் பணிப்பாளர்
யாழ் கல்வி வலயம்

# ஆன்மீகத்துடன் இணைந்து கல்விப் பணியை உயிர்மூச்சாகக் கொண்ட அதிபர்

மனித குலத்தின் வாழ்வியல் இன்பங்களைத் தனது இளமைப்பருவத்தே துறந்து துறவறமே நல்லறமாகக் கொண்டு இறைபணியுடன் மேன்மையான கல்விப் பணியினையும் மாசு அற அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றி 02.02.2011 இல் தனது அறுபதாவது வயதில் தான் சுமந்துவந்த கல்விப் பணியினின்றும் ஓய்வு பெற உள்ள எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அதிபர் சங்கைக்குரிய சகோதரி மேரி தஸ் நெவிஸ் லடிஸ்லாஸ் அவர்களாவர்.

வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட பெரியதோர் குடும்பத்தில் மூன்றவாது பெண்மகவாகப் பிறந்து, ஆரம்ப இடைநிலைக் கல்வியில் சிறந்தோங்கி, 1972 ஆம் ஆண்டுமுதல் தனது பணியை இறைவனுக்கு அர்ப்பணித்து இறைபணி, சமூகப்பணி ஆற்றத் தொடங்கியதுடன் தொடர்ந்து உயர்கல்வி கற்று B.A,M.Phil முதலாம் உயர்கல்வித் தகைமைகள் பலபெற்று யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் கல்விப் பணியாற்றி 2003ஆம் ஆண்டு முதல் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் அதிபர் சேவையினை ஆற்றத் தொடங்கினார். மேலும் அவர் தம் வாழ்வில் ஆன்மீகக் கல்வியில் பெற்ற தகைமைகள், உளவியல் வழிகாட்டலில் பெற்ற தகைமைகள், பயிற்சிகளும் கல்விப் புலத்தில் சிறந்ததோர் அதிபராக நற்பணியாற்றி, தான் தலைமை தாங்கிய நிறுவனத்தின் நல்வளர்ச்சிக்கும் மாணவர் தம் உயர் பெறுபேறுகளுக்கும் வடிகாலாக அமைந்திருந்தன. கர்நாடக சங்கீதத்திலும் உயர் தகைமை பெற்ற இவர் சிறந்த இசைஒளியுமாவார். ஆன்மீக உணர்வுடன் இவர் உணர்வும் இணைந்து அவரது வாழ்வைப் பிரகாசிக்க வைத்தன.

இத்தகைய சிறந்த ஆன்மீக பலம், இசை, உணர், கல்வித் தகைமை இத்தனையும் ஒருங்கே இணைந்த அதிபர் ஒருவர் ஓய்வு பெறுவது அவர் தலைமை தாங்கி நின்ற நிறுவனத்துக்கு ஒரு இழப்பாவதுடன் யாழ் கல்வி வலயத்திற்கும் ஓர் இழப்பாக அமைந்துள்ளது. எனினும் அகவை 60 என்பது கட்டாய ஓய்வுக்காலம் என்பதனால் அவரது பணி தொடர்ந்தும் வேறொரு பாணியில் நிறைவாக சமூதாயத்திற்கும் - அதனை வழிப்படுத்துதலுக்கு கிட்டவேண்டும். எதிர்கால சௌக்கிய வாழ்வுக்கு மனம் நிறைந்த நல் ஆசிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

**திருமதி வ. சிவபாலன்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.



# செஞ்சொற் செல்வரின் ஆசியுரை

அறிவுப்பணியாலும், ஆன்மீகப் பணியாலும் பெருமைபெற்று விளங்கியவர் அருட்சகோதரி அதிபர். மேரி லடிஸ்லாஸ் அவர்கள். 1972ஆம் ஆண்டு துறவு வாழ்வில் இணைந்து கடவுட் பணியையும், கல்விப் பணியையும் அர்ப்பணிப்போடு செய்த அன்னை. யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் இன்றைய ஒப்பற்ற வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய தொண்டு தனித்துவமானது. எவருடனும் பண்பாகப் பழகும் அம்மையார் அவர்கள் எல்லோரது இன்பதுன்பங்களிலும் தவறாது பங்குபற்றித் தன் அன்பை வளர்த்துக் கொண்டவர். கருணையும் கண்டிப்பும் மிக்க நல்லாசிரியராக அதிபராக தன் தூயபணியைத் தொடர்ந்தவர். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு தன் கல்லூரியிலுள்ள சைவ சமய மாணவிகளை நவராத்திரி வழிபாடு செய்ய அனுப்பி பிற மதத்தின் மேன்மையை மதிப்பவர். இப்பெருந்தகையின் மணிவிழாச் சிறக்க எனது நல்வாழ்த்துக்களையும், ஆசியையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை தானே"

**ஆறு.திருமுருகன்,**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.



## அருட்சகோதரி மேரி தஸ் நெவிஸ் லடிஸ்லாஸ்

# வாழ்க்கைக்குறிப்பு

- வடமராட்சி செம்பியன்பற்றினை பிறப்பிடமாகக் கொண்டு 02.02.1950ஆம் ஆண்டு பிறந்தார்
- தந்தையர் பெயர் பிலிப்பு லடிஸ்லாஸ், தாயார் பெயர் பிலோமினா லடிஸ்லாஸ்
- மூன்று ஆண் சகோதரர்களுடனும் இரண்டு பெண் சகோதரிகளுடனும் பிறந்த இவர் குடும்பத்தின் மூன்றாவது பிள்ளை
- இவர் தனது பாடசாலைக் கல்வியை நான்கு பாடசாலைகளில் தொடர்ந்தார்.

  1. யா/ செம்பியன்பற்று றோ.க.வித்தியாலயம்
  2. யா/ செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
  3. யா/ பாசையூர் சென் அன்ரனீஸ் றோ.க.வித்தியாலயம்
  4. வவு / இறைம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்

- துறவற அழைத்தலுக்கு செவிகொடுத்து, திருக்குடும்ப கன்னியர் சபையிலே தன்னை இணைத்துத் துறவியானார். தனது முதல் அர்ப்பணத்தினை 06.03.1972இலும், நித்திய அர்ப்பணத்தினை 23.02.1980 இலும் பெற்றார்.
- இளம் துறவியாய் பல்வேறு பணித்தளங்களில் சேவைபுரிந்தார்.

  1. மறைஆசிரியராகவும், முன்பள்ளி ஆசிரியராகவும், மன்னார் பண்டிவிரிச்சானில் பணி செய்தர்.
  2. விடுதிச்சாலை மேற்பார்வையாளராகவும், பங்குத்திருவழிபாட்டின் உதவுனராகவும், மன்னார் பறப்பாங்கண்டலில் பணி செய்தார்.
  3. பயிற்சி ஆசிரியராக கொழும்பு பம்பலப்பிட்டி புனித மரியாள் வித்தியாலயத்தில் பணியாற்றினார்.

◈ 1987ஆம் ஆண்டு ஆசிரியப் பணியில் இணைந்து அகவை அறுபது வரை பணியாற்றினார் இவரது சேவை விபரம் வருமாறு

ஆசிரியராக

1. கிளி / புலோப்பளை றோ.க.தமிழ்கலவன் பாடசாலை

   (14.12.1987 - 06.02.1989)

2. கிளி / பளை மகா வித்தியாலயம்

   (6.2.1989 - 30 - 7 - 1991)

3. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்

   (1.8.1991 - 31.12.1992)

4. யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

   (06.01.2003 - 30.08.2004)

அதிபராக

5. யா/ புனித அன்னாள் றோ.க.வித்தியாலயம் மானிப்பாய்

   (1.1.1993 - 5.1.2003)

6. யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

   (02.09.2004 - 2.2.2011)

◈ கல்வியிலே அதிக கவனம் எடுத்த இவர், தனது கலைமாணி (B.A), முதுதத்துவமாணி (M.Phil) பட்டங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும், கல்வி டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்திலும் மேற்கொண்டார். அது மட்டுமன்றி திண்டிவனம் லூமன் கல்வி நிறுவனத்தில் திருவிவிலிய டிப்ளோமாவையும், யாழ்ப்பாணம் I.C.O.F நிறுவகத்தில் உளவியல் டிப்ளோமாவையும் கற்றார்.

◈ இயல்பிலேயே பாடுந்திறன் கொண்ட இவர் வடஇலங்கை சங்கீதசபையின், கர்னாடக சங்கீதப் பரீட்சையில் 4ஆம் தரம் சித்தி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

◈ அர்ப்பணிப்பும் சேவை மனப்பாங்கும் கொண்ட இவர் செல்லுமிடமெல்லாம் சேவையினால் உயர்ந்து நிற்கின்றார்

# இறைபக்தியும் தலைமைத்துவ ஆளுமையும் நிறைந்த உன்னத அதிபர்

"தக்கார் தகவிலார் என்பது அவர்தம்
எச்சத்தால் அறியப்படும்" என்றார் வள்ளுவர்

உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தனது சமூகத்திற்கு வழங்கும் சேவையைப் பொறுத்தே வரலாற்றில் பதிக்கப்படுகின்றார். அந்த வகையில் யா/திருக்குடும்ப கன்னியர் மடத்தின் மைல்கல்லாக விளங்கி வரலாற்றில் இடம்பெறும் தகைமையைப் பெற்று இன்று மணிவிழாக் கொண்டாடும் நாயகியை வாழ்த்துவதில் உவகை அடைகின்றேன்.

கல்விப்புலத்தில் ஆசிரியராய் அடியெடுத்து வைத்த நும் பயணம் ஆண்டவன் சேவகியாய் அருளோடு துறவற வழியில் தொடர்ந்து, அதிபர் நிலைவரை உயர பொறுப்புமிக்க பதவியை பொறுப்பேற்று, இன்றுவரை அப்பணிக்கே உம்மை முழுமையாய் அர்ப்பணித்து, அரும்பல சேவையாற்றி வரும் அதிபர் பெருந்தகையே நீர் வாழ்க.

உம்பணிக்காலம் நாட்டின் கண்களாம் பெண்களின் கல்விக்குக் கிடைத்த பொற்காலம். கல்வித்தாகத்தோடு உம்மை நாடிவந்த குழந்தைகளின் தாகம் தீர்த்து, அவர்களின் வாழ்வுக்கு ஒளி கொடுத்த உமது பணி, பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும் என்பதில் வேறுபாடு ஏதுமில்லை.

இடைவெளியில்லாமல் நடந்துவந்த இளைப்பாறாத யுத்தம் கொண்டுவந்த பல சொல்லொணாத் துயரங்களுக்குள் நசியுண்டு நலிந்து வந்த மாணவச் செல்வங்களின் வாழ்விற்கு ஒளியேற்றி/ உயிர்ப்பைச் கொடுத்து, எம் இனத்தின் தனிச்சொத்தாக பேணப்படும் கல்விச் செல்வத்தைக் கனிவோடு ஊட்டிக் கல்விப் பசிபோக்கிய ஆன்மீக வித்தகியே.

மாறிவரும் கல்விப் புலத்தின் மாறுதல்களை உள்வாங்கி ஆன்மீகப் பாரம்பரியங்களை அதனோடு இணைத்துச் சிந்தனைச் செம்மல்களாய் மாணவிகளை செதுக்கிய சிற்பியே !

கல்வித் துறையில் ஏற்படும் மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து, வெற்றி காண்பதற்கு ஒரு அதிபர் எத்தகைய இன்னல்களை அனுபவிக்கவேண்டும் என்பதை

நன்கு உணர்ந்தவன் என்ற வகையில் தங்களின் இச் சீரிய பணிகண்டு, பணி செய்த காலத்தின் நிலை கண்டு, நிறை அன்போடு வாழ்த்துக் கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சிரித்த முகமும், சிந்தும் புன்னகையும், தெளிவான பார்வையும், நேரிய சிந்தனையும் கொண்டு அனைவர் மனங்களிலும் இடம்பிடித்துவந்த உம் எளிமைத்தனத்தை எண்ணிப் பார்க்கையில், "பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்" என்ற பாரதியாரின் பாடலை இரைமீட்கத் தோன்றுகிறது.

எனவே நொடிக்கு நொடி பலவினோதங்களையும் சவால்களையும் சந்திக்கும் இவ்வுலக வாழ்க்கை வட்டத்தில், அறுபது ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்வதென்பது புண்ணியப் பேறாகவே அமைகின்றது. அத்தகைய பேறைத் தங்களுக்கு அளித்த இறைவனைப் போற்றி மேலும் பல ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்து தன்னலம் அற்ற துறவியாய், பற்பல சேவைகளையாற்றி, இறையரசுக்காய் எல்லார் மனங்களையும் வென்று வாழ வாழ்த்துக் கூறுகின்றேன். எல்லாம் வல்ல இறைவனின் அருளும் நற்சுகமும் இதரபல நலன்களும் நிறைவாகக் கிடைக்க இறையாசி கூறி நிற்கின்றேன்.

வணபிதா. க.யேம்ஸ் சிங்கராயர்
அதிபர்,
புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை.

## வாழ்த்துப் பாமாலை.



1) அன்பும் அறிவும் ஆன்றநற் பண்பும்
இன்புற அமைந்திட்ட இதயமும் - என்றும்
நித்திய கர்த்தரின் நினைவிற் பணிசெயும்
சத்தியவருட் சகோதரி வாழ்க!

2) அகவை யறுபதை யடைந்ததால் மணிவிழாப்
புகநின்ற கல்விப் பேரொளி! - இகமதில்
சங்கைக்குரிய சகோதரி தஸ்நெவிஸ் லடிஸ்லஸ்
பொங்குநலம் பெற்றிட வாழ்க!

3) மன்பதை காக்கும் மறையவன் பணிக்கெனத்
தன்னையே தந்திட்ட தகுதியால் - அன்னைபோல்
ஆசிரியம் மேற்கொண் டதிபரு மாகிநின்ற
மாசிலாய்! வாழ்கபல் லாண்டு!

4) ஞானத் தவமியற்றி நாடியவர்க் கெல்லாம்
வானத் தரசுதன்னை வழிப்படுத்த - ஆனவரை
கல்விப் பணியோடு கடமைகள் பலசெய்தோம்!
தொல்லுலகில் தொடர்கவுன் தொண்டு!

5) சின்னஞ் சிறுவயதில் சிந்தைதனில் இறைநேசம்
பென்னம் பெரிதாகப் பிரகாசிக்க - மின்னல்போல்
தோற்றும் வாழ்வுதனைத் தூயவன் மலரடிக்கே
சாற்றிய சகோதரியே வாழ்க!

6. வந்தணை கின்ற வளமுடை மண்ணான
வடமராட்சிச் சிற்றூர்
செந்தமிழ் பொலியும் செம்பியன் பற்றதில்
சிறந்திடு முத்தமத் தம்பதி
பந்தமாய்ப் பிலிப்பு, பிலோமினா வளர்த்த
பாங்குடை இல்லறத் தவத்தினில்
சுந்தரச் சோதியாய் அறுவர் தோன்றினர்
சுகந்தரு மழலைச் செல்வமே.

7. பெண்கள் மூவரும் ஆண்கள் மூவரும்
பிறந்ததால் பேறுடைத் தாகியும்,

கண்கள் இவர்களுள் மூன்றாம் மகவெனக்
கண்மணி தஸ்நெவிஸ் காணவும்,
உன்கண் மாமழை உளம்நிறை பொழிதலால்
உன்னத ஆனந்தங் கொண்டுமே,
மண்கண் பிறந்ததன் மாதவம் இதுவென
மனதினி லெண்ணினர் பெற்றோர்.

8) எளிமை பெருமை இணைந்த குடும்பம்
இயேசுவின் வழியினைப் பற்றியே
அழிவிலாப் பண்புடன் ஆத்ம பலமிக
அன்பு மகள்பெறக் கல்வியை
தெளிவுடன் சொந்தவூர்ப் பள்ளியிற் சேர்த்தனர்
தேர்ந்த ஆரம்பக் கல்வியும்
நெளிவிலா இடைநிலைக் கல்வியும் பெற்றுயர்
நிலையினைக் கண்டு களித்தனர்.

9. பாசையூர் அன்ரனீஸ் பாடசாலையிலும்
படித்தபின் வவுனியா சென்று,
ஆசையாய் றம்பைக் குளம்கல் லூரியில்
அடுத்ததாய் ஏஎல் முடித்தனர்.
நேசமாய் யாழ்ப்பாணப் பல்கலை நாடியே
நிறைவுசெய் கலைத்துறை நெறியினில்
பேசவே பெருமையாய் முதலாம் வகுப்பில்
பெற்றனர் பட்டத்தில் சித்தியும்.

10. காலங்கள் கடக்கவும் கல்வியால் பட்டமும்
கனதியாய்ச் சேரவே செய்தன
கோலமாய்க் கல்வியில் டிப்ளோமாப் பட்டமும்
கூடமுது தத்துவ மாணியும்,
சீலமாய் உளவியல் ஆற்றுகை, வேதத்தில்
சிறப்புற டிப்ளோமா பெற்றதும்
வாலிதாய், சங்கீத சபையின் தேர்விலும்

11. மகிபவனின் இராச்சிய மகிமையி னுந்தலால்
மண்ணினில் வாழ்வினர்ப் பணிப்புடன்
இகமதில் துறவறம் எழுபத் திரண்டாம்

ஆண்டினில் ஏற்றே நின்றனர்
சுகமதே யாகிட நித்திய அர்ப்பணத்
தூய்மையின் பிரவேசம் என்பதில்
அகமதில் அன்புடன் அறிவும் அணைந்ததால்
ஆசிரியப் பணியின ராகினர்.

12. முன்பன் னிமுறைக் கல்வி ஆசிரியர்,
முதல்வன் திருப்பாடல் பழக்குநர்,
அன்புட னமைந்த பங்குப் பணியினில்
அமைந்த விடுதிமேற் பார்வையர்,
மன்னார்ப் பிரதேச மண்ணிற் பலகாலம்
மன முடன் சேவைகள் செய்தபின்,
தன்னல மற்றநல் லாசிரியப் பயிற்சியைத்
தலைநகர் கொழும்பினில் முடித்தனர்.

13. அனுபவக் கல்வியும் ஆண்டவன் துணையதும்
அருட்பணி யாற்றிடும் போதினில்
புனிதமாய் தஸ்நெவீஸ் லடீஸ்லஸ் நெஞ்சினில்
புகட்டிய செய்திகள் பலப்பல
கனியெனக் கற்பித்தற் றொழிலைக் கடமையாய்க்
கருத்துடன் ஏற்றவர் செய்தலால்
இனிமைசேர் இருபத் துமுன் றாண்டுகள்
இயற்றின மெய்த்தவ மின்னதாம்.

14. புலோப்பளை முதல்பளை கொடிகாமம் மானிப்பாய்
போதருங் கல்வியைப் புகட்டி,
களைப்பிலா அதிபராய் மானிப்பாய் சென் ஆன்ஸ்
கல்லூரிப் பணியினி லுயர்ந்து,
அழைப்பினால் யாழ்நகர் திருக்கு டும்பக்
கன்னியர் மடத்தினி லமர்ந்து,
உழைப்பினா லதைத்தே சியப்பாட சாலையாய்
உயர்த்திய முதல்வராய்ச் சிறந்தார்.

15. பதவிகள் பட்டங் களெனப் பன்முகப்
பரிமா ணங்கள் கண்டதால்
உதவிகள் பலபேர்க் குவந்து அளித்ததால்
உள்ள முவகை கொண்டதால்

கதவுகள் திறந்திடக் கைகள் தட்டலால்
கருணை பொழிமுகில் காணலால்
இதமுறு இறைவனில் இதயந் தோய்தலால்
இவையெலா மவனருள் என்றனர்.

16. என்னையு முன்பணிக் காக்கிய இறைவனே!
இன் னுயிர்க் கெல்லாம் அருளென,
முன்னைய காலம்போல் பின்னைய காலமும்
மூழ்கியே உன்னாமந் துதித்திட,
அன்னைபோ லாற்றிடும் அற்புத அண்ணலே!
அரிய வுன் சிங்காதன மீதினில்
மன்னிய யாவரும் மகிழ்வு றும் பணிசெய
மகிமையால் ஆக்குவா யென்றனர்.

17. பிறந்ததும் வளர்ந்ததும் பேரருட் பொலிவினாற்
சிறந்ததும் துறவினுட் சென்றதும்
மறந்திடா இறைநினைப் புடன்பணி செய்ததும்
மண்மிசை வாழ்நாட் கழிந்ததும்
அறுபது அகவைகள் ஆண்டவர் கருணையால்
ஆனந்த மாகவே நிறைந்துபோய்
வருகிற காலமும் வருத்தமின் றேகிட
வழங்குவா யவர்க்காசி எந்தையே!

18. ஆட்டிடும் உன்கரத் தாடிடும் பம்பரம்
அவனியில் மாந்தரென் றெண்ணியே
கூட்டிடும் குவலய மீதினில் கர்த்தரின்
குறிப்பினை ஏற்றநற் சகோதரி
வாட்டிடும் நன்மையும் தீமையும் வாழ்வினில்
வந்திடில் வழிதவ றாமலுன்
வீட்டினில் விளக்கென மண்ணினில் ஒளிதர
வேந்தனே! காத்தருள் புரிகுவாய்!

**கலாநிதி செ. திருநாவுக்கரசு.**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.

முன்னாள் துணைவேந்தரின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத் திருக்குடும்ப கன்னியர்மட / தேசியப் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லொஸ் அவர்கள் 02.02.2011 இல் தனது ஆசிரியர், அதிபர் சேவைப் பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்து மணிவிழாக்காணும் நிகழ்வுக்கும் வாழ்த்துரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் 23 வருடங்களுக்கு மேல் கல்வியில் குறிப்பாக பெண்களின் கல்வி வளர்ச்சியில் மிகச்சிறந்த பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாண திருக்குடும்ப கன்னியார் மடத்தையும், கன்னியர் மகாவித்தியாலயத்தையும் இணைத்து ஒரு பாடசாலையாக மாற்ற அதனை தேசியப்பாடசாலையாகத் தரம் உயர்த்துவதற்கு பெரும் பங்காற்றினார். இவரது தலைமையில் வடமாகாண ஆளுநர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தேசியப்பாடசாலையாக தரமுயர்த்தும் நிகழ்வு சிறப்புற இடம்பெற்றது இப்பாடசாலையின் நீண்ட வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கக்கூடிய நிகழ்வுகளில் ஒன்றாகும்.

கல்வியில் பின்தங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த இவர் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் பல இடர்பாடுகளுக்கு முகம்கொடுத்தபொழுதும் தனது கடின முயற்சியினால் கல்வியில் பல படிகளை சிறப்புறக் கடந்து வந்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர் முதல் வகுப்பில் சித்தியடைந்துள்ளார். மேலும் தேசிய கல்வி நிறுவனத்தில் கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமாவையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணியையும் செய்துள்ளார். மேலும் சமய மற்றும் உளவியல் துறைகளில் டிப்ளோமா தகைமைகளை இந்தியாவிலும் இலங்கையிலும் பெற்றுள்ளார். இவர் ஆரம்பத்தில் பல பின்தங்கிய கிராமப் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்ததுடன் கிராமப்புற, வறிய, பின்தங்கிய கல்விச்சூழலற்ற குடும்பப் பின்புல மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறைகொண்டு பணியாற்றியிருந்தார். கன்னியர்மடம் அதிபராகவிருந்த பொழுது அப்பாடசாலையை யாழ்ப்பாணத்து முன்னணி மகளிர் பாடசாலையாக மாற்ற வேண்டும் என அயராது உழைத்து வந்தார். தனது மாணவிகள் கல்வியிலும் விளையாட்டிலும் வாழ்க்கைத் திறன்களிலும் சமயநெறி நின்று ஒழுக்கத்திலும் முன்னணியில் நிற்கவேண்டும் என கடினமாக உழைத்தார். அதில் குறிப்பிடத்தக்க வெற்றியையும் கண்டார். மேலும் மாணவிகளிடையே ஒற்றுமை, சகோதரத்துவம், புரிந்துணர்வு போன்ற உயர் விழுமியங்களை வளர்த்தெடுத்தவர். மேலும் இவர் உளவியலிலும் வழிநடத்தலிலும் புலமை பெற்றிருந்ததால் மாணவிகளுக்கும் பாதிப்பிற்குள்ளான மற்றவர்களுக்கும் உளவள ஆலோசனைகளை வழங்குவதில் சிறப்புற்று விளங்கினார்.

அருட்சகோதரி அவர்கள் இளம் துறவியாயும், பற்பல பணிகளைச் செய்து பின்னர் நித்திய துறவற அர்ப்பணத்துடன் வாழ்க்கையை முன்னெடுத்தவர். அதிபர் சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்தாலும் தொடர்ந்தும் சமூக சமயப்பணிகளில் ஈடுபடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். இவரது அறிவு, ஆற்றல், அர்ப்பணிப்பு, செயற்திறன்களை சமூகம் நல்முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அறுபது வயது தற்பொழுது ஒரு பெரிய வயதாகக் கருதப்படுவதில்லை. எழுபத்தைந்து வயதிற்கு மேலேயே முதியவர்கள் எனக்கருதப்படுகின்றார்கள். எனவே இன்னும் பதினைந்து வருடங்களுக்கு துடிப்பான ஆக்கபூர்வமான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும், நல்ல தேகசுகத்தை இறைவன் அளிக்க வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் துணைவேந்தர்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

# பல்துறை ஆளுமை மிக்க அதிபர்

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் மிஷனரிமாரின் கல்விப்பணி காத்திரமானது. அவர்களின் வருகையால் தோற்றம் பெற்று இன்றுவரைக்கும் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளுள் திருக்குடும்ப கன்னியர்மடமும் சிறப்பிடம் வகிக்கிறது. இத்தகைய பாடசாலையின் புகழ்பூத்த அதிபர் வரிசையிலே அரும்பணியாற்றி ஓய்வு பெறுகின்ற அருட்சோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வடமராட்சி செம்பியன்பற்றிலே பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை தனது ஊரிலும் இடைநிலைக் கல்வியை வவுனியாவிலும் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியானார். பின்னர், அப்பல்கலைக்கழகத்திலேயே கல்வியியல் முதுமாணிப் பட்டத்தையும் தேசிய கல்வி நிறுவன பட்டப்பின் டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்று கல்வியால் உயர்ந்தார். தனது 22ஆவது வயதிலே துறவற வாழ்வில் நுழைந்து இறைபணிக்காகத் தன்னை அர்ப்பணித்தார். கல்விப் பணியையும் இறைபணியையும் தனது இரு கண்களாகக் கொண்டு அர்ப்பணிப்புள்ள சிறந்த ஆசிரியையாகவும், தாயன்புள்ளம் கொண்ட சமய தொண்டராகவும் சமூக வாழ்விலே வாழ்ந்து காட்டினார். இவர் அருட்சகோதரியாக இருந்தமையாலும் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள மக்களுக்கு அறப்பணி செய்யவேண்டி இருந்தமையால் அங்கெல்லாம் ஆசிரியப்பணியையும் இறைபணியோடு மேற்கொண்டு மக்களின் ஆதரவையும் அன்பையும் பெற்றுப் பெருமைக்குரியவரானார்.

அதிபர் பணியிலிருந்து ஓய்வுபெறுகின்ற அருட்சகோதரி அவர்களை 2003ஆம் ஆண்டிலேயே எனக்கு தெரியவந்தது. எனினும் திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கு அதிபரான பின்னர் தன் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்புக் கிட்டியது. இவரை முதன் முதலில் நான் பார்த்தபோது உண்மையில் மேரி மாதாவைப் பார்ப்பது போன்ற ஒரு உணர்வு எனக்கு ஏற்பட்டது. தூய உடை, நிமிர்ந்த நடை, நேரான பார்வை, ஞானச் செருக்கு கனிவான பேச்சு அன்பான உபசரிப்பு போன்றன அன்று என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எனது அந்தச் சிந்தனையை அதிபர் அவர்கள் தனது சேவைக்காலத்தில் மெய்ப்பித்துள்ளார் என்று கூறுவதிற் பெருமைப்படுகின்றேன்.

தான் பொறுப்பேற்ற பாடசாலையை அதன் கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் இம்மியளவும் குறையாது கட்டிக்காத்து, அதன் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தனது விடா முயற்சியினாலும், சமூகப்பங்களிப்புடனும், ஆண்டகையின் அருட்பார்வையினாலும் யாழ் மாவட்டத்தின்

5ஆவது தேசிய பாடசாலையாக திருக்குடும்ப கன்னியர் மடப்பாடசாலையை ஆக்கியபெருமை இந்த அதிபரையே சாரும் என்று கூறுவதில் மகிழ்வடைகின்றேன். இவருடைய நிர்வாகம் வினைத்திறனுடையதும் விளைதிறனுடையதுமானதுமாகும் . இதனாற்றான் இவருடைய காலத்தில் பரீட்சைப்பெறு பேறுகளோ, இணைப்பாடவிதான செயற்பாடுகளோ, பல்கலைக்கழக அனுமதிபெறும் மாணவிகளது எண்ணிக்கையோ வருடா வருடம் அதிகரித்து சென்று கொண்டிருப்பதைப் புள்ளி விபரங்கள் உறுதி செய்கின்றன. விளையாட்டுத்துறைகளில் மாவட்ட மட்ட, மாகாண தேசிய மட்டங்களுக்கெல்லாம் அணிகள் சென்று தங்கப்பதக்கங்களை தமக்காக்கிக்கொண்டு வருவது இவரது காலத்தில் என்றால் இது மிகையல்ல. நாடகம், நாட்டியம், இசை ஆகிய போட்டிகளில் கூட திருக்குடும்ப கன்னியர்மட குழுவினரே தேசிய மட்டம் வரைக்கும் செல்லக்கூடிய தகுதியைப் பெறுவார்கள் என்பது இன்றுவரைக்கும் நிருபணமாகி வருவதைச் சமூகம் கூற நான் கேட்டிருக்கிறேன். இத்தனை சிறப்புகளுக்கெல்லாம் மேய்ப்பனாக இருந்து நெறிப்படுத்திய அதிபர் பெருமைக்குரியவராகிறார்.

இவரிடம் நான் கண்ட இன்னொரு பண்பு புறம் கூறாமை. எதையும் நெற்றிக்கு நேர் கூறுவார். இது எல்லோருக்கும் பிடிக்கும் என்றில்லை. அதனாற்றான் என்னவோ இவரை கண்டிப்பான அதிபர் என்கிறார்கள் சிலர். பிழையைச் சுட்டிக்காட்டுவதும் சரியை ஏற்றுக்கொண்டு தட்டிக் கொடுப்பதும் சிறந்த நிர்வாகியின் அணிகலன். இதை எவரும் மறுப்பதற்கில்லை. அயராது, மனம் தளராது, சவால்களுக்கு முகம் கொடுத்து, சகிப்புத் தன்மையுடன், சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப, இத்தகைய பெரிய பாடசாலையொன்றை நடாத்துவது என்பது இக்கால சூழமைவில் கடினமானதொன்றாகும். இருந்தும் இவையெல்லாவற்றுக்கும் துணிச்சலுடன் எதிர் நீச்சலடித்து சுமைதாங்கியாக நின்று பாடசாலையின் உயர்ச்சியே எனது இலட்சியம் என்ற தூய சிந்தனையோடு தேசிய பாடசாலையாக மாற்றுவதற்குரிய அடிப்படைத் தகைமைகளைப் பெறக் கூடியவாறு திட்டமிட்டு நெறிப்படுத்தி வெற்றி கண்ட அதிபர் அவர்கள் ஒய்வு பெறுகிறார் என்பது நம்ப முடியாத ஒரு செய்தியாகும். அகவை 60 காண்பதில் அரச சேவையில் ஓய்வு, உண்மை உழைப்பாளிக்கு ஓய்வா? அது யதார்த்தமா?

மணிவிழாக் காணும் எமது அதிபர் தனது ஒய்வுக்காலத்தில் இறைபணி, சமூகப்பணியாற்றக் கூடிய தேக சுகத்தையும் ஆயுட் பலத்தையும் அளிக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க நீடு ! வளர்க பல்லாண்டு உம் பணிகள்

**ந. வன்னியசிங்கம்**
ஓய்வுநிலை அதிபர்,
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.

# விழாக்களை வினைத்திறனுடன் நடத்தும் பதிவுகள்...






முத்தமிழ்விழாக்களில்...




ஆசிரியர் தினத்தில்...




ஆங்கில தினத்தில்...





தேசிய பாடசாலையாய்த் தரமுயர்ந்த விழாவில்...

# பாடசாலையின் பல்வேறு பணிக்களங்களில்...




பரிசளிப்பு விழாவில்...



விளையாட்டுப் போட்டியில்...



ஆரம்பப்பிரிவின் ஊக்கச்
செயற்பாட்டில்...



கணனிக் கலைக்கூடம் திறந்து
வைக்கையில்...



பிறந்த நாளிலே மகிழ்ந்து நிற்கையில்...



தலைமை மாணவியின் துயர நிகழ்விலே...

# தனக்கென வாழாத் தலைவி

வாழ்வில் திறமையும் உழைப்பும் மானிடனை உயர்வடையச் செய்யும். சிலர் தம் திறமைகளையும் உழைப்பையும் பிறருக் காய் அர்ப்பணித்து அதில் நிறைவு கண்டு இறை செயலில் தம் பங்களிப்பை உலகிற்கு வழங்குவர்.

உலகில் ஒவ்வொரு ஜீவனும் பிறந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அன்றும் ஓர் நாள் இனிதாய் பிலிப்பு லடிஸ்லாஸ் பிலோமினா தம்பதிகளுக்கு அழகான மலரொன்று அவர்கள் வாழ்வில் புதுவரவாய் பூத்திருந்து தனக்குத் தனக்கென வாழும் பூமியில் உங்களுக்காய் உங்கள் உருவாக்கத்திற்காய் என்னைத் தர நான் பிறந்திருக்கிறேன் என மௌன மொழி பேசும் பிஞ்சு மழலையின் குரல் எங்கும் ஒலிக்க இன்றைய எமது அன்னை அவனியில் 02.02.1950ல் வடமராட்சி மண்ணில் தன் சுவாசத்தைத் தொடங்கினார்.

இவர் உறிஞ்சிய முதற்காற்று இன்று திருக்குடும்பத்திற்கு சுவாசமாய் வாசமாய் உயிர் கொடுக்கவும் மணம் வீசவும் காரண மாயிற்று. துடிப்புள்ள நங்கையாய் பிறந்த இவர் பெற்றோரின் முழுமையான அன்பைப் பெற்று அவர்களின் உயர் சிந்தனை, தியாகங்கள் என்பவற்றால் கல்விக்காய் அவர் களைப் பிரிய நேரிட்ட போதும் தான் பெற வேண்டிய ஆளுமையிலும், கல்வியோடு மன அமைதி தரும் இசை ஞானத்திலும்வளர்ந்தார்.

வாழ்வுக்குத் தேவையான தேடல் களில் ஈடுபட்ட தஸ்நெவிஸ் எனும் சிறுமலர் தன் எதிர்காலத்திற்கான ஆன்மீகத் தேடலிலும் மூழ்கி 16.9.1972ல் தன் முதல் அர்ப்பணத்தைத் தொடங்கி 23. 02. 1980ல் முழுமையான பிறருக்கென வாழும் தியாக வாழ்விற்கான நித்திய அர்ப்பணத்தில் இறைவனோடு ஒப்பந்தமாகி இன்று வரை அதனைக் காத்து நின்று திருக்குடும்பத்தின் சகோதரியாய், தோழியாய், தாயாய் பல்வேறு விதமாகப் பரிணமித்தார்.

தன்சேவைப் பயணத்தில் அன்னை யாய் அதிபராய் 06.01.2003ல் காலடி வைத்தார். இவர் கால் பதித்த நேரம் திருக்குடும்பம் பாரிய மாற்றத்திற்கு உள்ளாகி (இருபாட சாலைகள் இணைப்பு) இருந்தது. வந்தவர் நிலைமையைக் கண்ணுற்றார் கருத்தாய்ச் சிந்தித்தார். செய்ய வேண்டியவை களை வரிசைப்படுத்தினார். திட்டமிட்டு ஒழுங் கமைத்துப் பாடசாலையை சிறப்பாக இயங்க வைத்து இன்று சாதனைகள் பலவற்றோடு தேசிய பாடசாலையாக தலைநிமிர வைத்தார்.

இவர் சாதித்தவை, சாதாரணமான வையல்ல. இவரின் அருங்குணங்கள், இவர் பணிவாழ்வுப் பயணத்தில் கண்ட இடர்கள் அருகிலிருந்து உணர்ந்தவள் என்பதால் இவ் வேளையில் அதனைப் பகிரலாம் என நினைக்கிறேன்.

மாணவர் உருவாக்கத்தில் கல்வி, ஒழுக்கம், பண்பாடு இவை மூன்றும் இணைந்து இருக்கவேண்டும். மாணவர் அடைவுமட்டம் உயரவேண்டும் என்ப தற்காய் ஆசிரியர்களின் கற்பித்தற் செயற் பாட்டில் கவனம் செலுத்தி, மாணவர் உளப்போக்கை ஆற்றுப் படுத்தி, 'பசியோடு வரும் மாணவரின் உணவுத் தேவையைக் கவனித்துப் பாடசாலையின் முதற் தேவை யைப் பூர்த்தி செய்யும் சான்றாய், மாணவரை ஒரே தடவையில் நாற்பது பேரை பல்கலைக் கழகம் அனுப்பிவைத்தார்.

ஆசிரியர்களுக்கு நவீன கற்பித்தல் உத்திகளைக் கையாள வாண்மை விருத்திக் கான உதவிகளையும் செய்தார். பாட சாலை யிலேயே கணிணிக் கல்வி பெற ஒழுங்க மைத்தார். பல்வேறு ஆற்றலுள்ள வளவா ளர்களைப் பாடசாலைக்குக் கொண்டு வந்து பயிற்சிகளை வழங்கினார். உள்ளக மேற்பார் வையைச் சிறப்பாக செய்தார். நல்ல முகாமையாளருக்குரிய எல்லா நடவடிக்கை களை யும் மேற்கொண்டார்.

மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக் களை ஒழுங்கமைத்து கணிதத்தில் பின்னடைந் தோரையும் ஏனைய மெல்லக் கற்கும் மாணவர்களையும் உயர்வடையச் செய்தார். பாடசாலை தவிர்ந்த மேலதிக வகுப்புக்கள் தேவைப்படும் வசதி குறைந்த மாணவருக்காய் பலரிடம் பரிந்துபேசி நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுத்து பக்க பலமாய் இருந்தார்.

வசதிக் குறைவால் பின் நிற்கும் மாணவர் களையும் திறன்களை வெளிப் படுத்த முடியாமல் மறைந்திக்கும் மாணவர்களையும் தட்டிக்கொடுத்தார். காலை ஒன்றுகூடலில் மாணவர் பங்குபற்றி வெற்றி பெற்ற வேளை யிலும் பாராட்டுதல்களை வழங்கி ஊக்கப்படுத்தி உற்சாகமூட்டினார்.

இதனால் மாணவர், போட்டிகளில் தன்னிறைவோடு பங்குபற்றி சாதனைகளைப் படைத்தனர். தேசிய மட்டத்திலும் தங்கள் ஆற்றலைக் காட்டி மிளிர்ந்தனர். கண்டிப்போடு கூடிய இவரது வழிகாட்டல் மாணவர்களுக்கு போகும் இடமெல்லாம் நற்பெயரைத் தேடிக் கொடுத்தது. போட்டிகள், சுற்றுலா, மாணவ தலைவிகளின் சுற்றுலா என்பவற்றுக்கு மாணவர்களைக் கூட்டிச்செல்லும்போது தானும் உடன்சென்றார். பாதுகாப்பு, வழிகாட்டல், மட்டுமன்றி நல்ல தாயன்போடு உணவுத்தேடலில் முதற்தரம், மாணவர் விருப்பறிந்து கொடுத்தல், அன்னைக்குரிய பரிவோடு பகிர்தல், ஓய்வு நேரம், பயணங்களில் உற்சாகமான ஆடல் பாடல் இவரிடம் மேலோங்கிய அற்புதக் குணங்கள். ஒரு முறை சுனாமி தாக்கிய முல்லைத்தீவு பயணத்தின் போது காலையில் நாம் எழு முன் வெளிச் சென்று உணவு தேடி வைத்து விட்டு தேனீரைத் தானே தயாரித்து வைத்து எம்மைத் துயிலெழுப்பிய நேரங்கள் மறக்க முடியாதவை.

மாணவர்களை வெளியில் கூட்டிச் செல்லும் போது அழகாக அவர்களை அலங்காரித்துக் கூட்டிச்செல்லும் அழகுணர்ச்சி மேலோங்கிக் காணப்பட்டது. இதனால்

பாண்ட் இசைக் குழுவினரும் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு ஒவ்வோரு முறைக்கும் ஒவ்வொரு வகை உடை தயாரித்துக் கொடுத்து அவ் ஆடை பிறர் பாவிக்காமல் இருப்பதிலும் கருத்தாய் இருந்தார். வெளி நிகழ்வுகளில் பங்குபற்றும் மாண வர்களின் ஆடை அலங்காரங்களைத் தன் மேற்பார் வையின் கீழ் ஒழுங்கமைத்தார்.

இதற்கான நிதித்தேடலில் வல்லுநர். நிறுவனங்கள், தனியாள் என உதவும் குணமுடையோர்யாவரிடமும் நிதி பெற்று மாணவர் உணவு, உடை, போக்குவரத்துச் செலவு, கல்விச் செலவு விளையாட்டு, கலை நிகழ்விற்கான சாதனங்கள் ஏனைய தேவைகள் எனக் குறிப்பறிந்து செலவு செய்தார்.

இத்துடன் அவர் நின்றுவிடவில்லை. நிதி பெறுவது மட்டுமல்ல. மாணவர் ஆசியர்களிடம் பிறர் துயருறும்போது உதவும் குணம் ஏற்பட வழி செய்தார். மற்றவர் துயரில் சிறு துளியாவது பங்குபற்ற வேண்டும் என சமூக விழுமியத்தை மாணவரிடம் விதைத்தார். சுனாமி, நிசாப்புயல், வன்னிப் போர் என நீண்டதுயர் மக்களை வாட்டிய போதெல்லாம் மாணவரிடம் அதனைக் கொண்டு சென்றார். தம் வசதிக்கேற்ப ஒரு பென்சிலாவது கொடுத்துப் பங்கேற்கும் நல்ல மனப்பாங்கை சிறுவரிடத்தில் ஏற்படுத்தினார்.

துயரில் பங்குபற்றுவதில் தனக்கு நிகர் தானே எனும் மாதிரி அவரின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. திருக் குடும்பத்தின் எந்த அங்கத்தவர் துயருறும் வேளையெல்லாம் தனக் குரிய பங்கினை ஆற்றும் இவர், இழப்புக்களின்போது உடனிருந்து வேண்டிய மரியாதையைச் செய்வதில் மானிடத்தின் உச்ச நிலையில் இருந்தார். இளைப்பாறிய முன்னாள் திருக்குடும்ப ஆசிரியை திருமதி மாகிறேற் சவிரிமுத்துவின் மறைவின்போது ஆசிரிய மாணவிகளை அவருக்குரிய மரியாதையைச் செய்ய வைத்தார்.

எமது பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழக அனுமதி பெற்று இறந்த மாணவி, நோயினால் இறந்த மாணவர் இவர்களின் இழப்பின்போது அக்குடும் பங்களோடு சேர்ந்து தானும் துடித்தார். பல்வேறு காரணிகளால் பெற்றோரை இழந்த மாணவிகளுக்கு வேண்டியன செய்தார். ஷெல் வீச்சில் பெற்றோரை இழந்த எம்மாணவி ஒருத்தியின் எதிர் காலத்திற்காக வேண்டிய முன்நடவடிக்கை எடுத்து செயற்பட்டது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக கூறலாம்.

இன்னும் இழப்பின் உச்சக் கட்டத் திற்கு திருக்குடும்பம் மூழ்கிய எம் மாணவத்தலைவி யுலைன்ரா யோசப்பின் சோகத்தில் ஒரு தாயாய் தலைவியாய் சோதரியாய் அவரின் துடிப்பையும் செய லையும் கண்டு வியந்தேன். அம்மாண வியின் மரணச் சடங்கு வரலாறாய் பதிவாகிய இறுதி ஊர்வலம் எவராலும் மறக்க முடியாததாகியது. இத்தகைய எந்த சோகமாக இருந்தாலும் மன உறுதியுடன் செயற்படும் அவர் திறனைக்கண்டு வியந்து நின்றேன்.

எத்தகைய துயரோ, இழப்போ, அவரை வாட்டிய போதிலும் சோதனைகளைச் சாதனையாக்கிய அவரின் செயற்பாட்டுத்திறன் பாராட்டுக்குரியது. தனது சொந்த உறவுகளின் துயரைத் தூர வைத்துத் தன் கடமையை நிதானமாக தான் சார்ந்த துறவற வாழ்விற்கு ஏற்ப ஏழ்மையாய் இரக்கமுள்ள துணிச்சலான தலைமைத்துப் பண்புள்ள தலைவியாய்த் திகழ்ந்தார்.

துயரில் பங்குபற்றும் இவர். துயரங்கள் தாக்கும்போது துணிச்சலோடு எதிர் கொள்ளும்திறன் கொண்டிருந்தார். நிசாப் புயல் தாக்கியவேளை பாடசாலையின் வளங்களைக் காப்பதில் தனித்து நின்று போராடினார்.

உதவிக்கு எந்த ஆசிரியரும் வரமுடி யாத சூழலில் பாடசாலையின் ஆவணங்கள், வளங்கள் காணாமல், அழிந்து போகாமல் காப்பாற்றிய கணங்களை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது.

வளங்களைப் பெறுவது மட்டுமல்ல காப்பதும் பெரிய விடயமாகும். சில நேரங்களில் இரவுக் காவலாளி வராத போது படும் துன்பம் செல்லிலடங்கா. ஒவ்வொரு வளத்தையும் அவர்பெறுவதற்காய் அலைந்த கணங்கள், சந்தித்த இடர்கள் அவமானங்கள், உடல்உழைப்பு, இவையெல்லாம் உடனிருந்த எனக்குத் தெரிந்தவை. பாடசாலை இவ்வளவு அழகோடு மிளிர்ந்து நிற்பதற்கு அவரது திட்டமிடல், ஒழுங்கமைப்பு, தியாகம், அழகுணர்வு, எதிர்காலச் சிந்தனை என்பவையாகும்.

தூரநோக்கில் சிந்தித்து எமது பாடசாலையின் முதற்தரத் தேவையான கலை அரங்கு, விளையாட்டுத் திடல் போன்ற பெரிய தேவைக்காய் சிறுகச் சிறுகச் சேமிக்க வேண்டுமென்ற அவா நான் புரிந்தவை. தெரிந்தவை.

இவர் சாதித்தவையைப் பட்டியலிட முடியாது. கல்விக்கான தேடல். வளங்க ளுக்கான தேடல். தொடர்தேடல். இன்று திருக்குடும்பம் தலைநிமிர்ந்து தன்னிறை வோடு வாழ வழி செய்தது. இவரின் இத்தகைய சாதனைக்குச் சான்று இங்கு நிகழும் விழாக்கள். தேசியப் பாடசாலையால் தர முயர உழைத்து, அதன் பயனைப் பெற்று, பெற்ற மகிழ்ச்சியை தேசிய பாடசாலையாய் தரமுயர்த்திய விழாவாகக் கொண்டாடி வெளிப்படுத்தினார். பலரின் பார்வையை வினாக்குறியோடு நோக்க வைத்த இவ்விழா பாடசாலைப் பதிவுகளில் சிறப்பான ஓர் மைல்க்கல்.

விழாக்கள் மாணவரிடத்தே நிறைய விடயங்களைக் கற்றுக்கொடுக்கிறது. பாடசாலையில் நிகழும் எல்லாவிழாக்களையும் சிறப்பாக செயற்படுத்துவதோடு நிறுவுனர் தினம், ஒளிவிழா போன்றவற்றிற் அர்த்தமுணர்ந்து செயற்பட வைத்தார். பாடசாலைக்

கற்பித்தல் வாழ்வை நிறைவு செய்து இளைப்பாறும் ஆசிரியர்களுக்கான விழாக்களை நன்றியின் விழாவாய், ஆழமான சிந்தனைகளை மாணவரிடம் தூண்டும் வகையில் நடாத்திக் காட்டும் பெருமைக் குரியவர்.

இதில் நான் சொன்னவை துளிகள். இந்த மழையின் குளிர்ச்சியை தாள்களில் பதிவு செய்ய முடியாது அன்பு, அரவணைப்பு பாராட்டுதல், எடுத்துச் சொல்லிப் புரிய வைத்தல், இரக்கம், உதவுதல் தேடல் என மானிடனுக்குத் தேவையான அனைத்தையும் தன்தலைமைத்துவப் பார்வையில் நின்று அள்ளித் தந்தவர்.

இவருக்கு இன்று நாம் பிரியாத விடைசொல்ல விழைக்கிறோம். உம்மில் பெற்றவை எம்முள் குளிர்கின்றன. பிறருக்கும் அக்குளிர்ச்சியை நீர் வழங்க வேறு பணித் தளங்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன. யாம் பெற்ற இன்பம் பிறர் பெற வாழ்த்துகிறேன். இதற்கு நீர், உடல், உளச் சுகத்தோடு நீண்ட நாட்கள் பணிவாழ்வில் உம்மைக் கரைக்க இறைவன் ஆசிரும், துணையும் என்றும் நிறைவாய் கிடைக்க வேண்டி வாழ்த்துகிறேன்.

தனக்கென வாழாத் துறவியே. செல்லுமிடமெல்லாம் உம் வாசனையைக் கொண்டு செல்லும். அந்தவாசத்தின் சுவாசத்தினை நாமும் பெறுவோம். நன்றி தாயே நன்றி.

**திருமதி சித்ரா இராஜரெட்ணம்**
முன்னாள் உப அதிபர்.

# பாடசாலையின் உயர்வுக்கு உரமான அதிபர்

யாழ். குடாவில் வடமராட்சி மண் தந்த வலிமை மிகு புதல்வர்களில் அதிபர் நெவிஸ் அவர்களும் ஒருவராவார். அவர் சேவையில் இருந்து இளைப்பாறும் இத்தருணத்தில் அவர்களோடு பணியாற்றிய நினைவுகளை இவ் இதழில் பதிவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

எழுபதுகளின் பின்னால் தன்னைத் துறவறத்தில் இணைத்துக்கொண்டு பல்வேறு பாடசாலைகளில் தன் கல்விப்பணியை ஆற்றி 2004 அளவில் எமது பாடசாலையில் அதிபராக கடமை ஏற்றுக்கொண்டார்.

இவருடைய ஆளுமைகளை பல தரப்பட்ட கூறுகளாக நாம் கண்டுணரலாம். மாணவர் கல்வி நலனில் இவரது அக்கறையை, எடுத்துக்கொண்டால் இவருடைய காலப் பகுதியிலும் அதிக எண்ணிகையான மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றிருப்பதோடு, கல்வியியற் கல்லூரிகளுக்கும் தெரிவாகி உள்ளனர். இன்று பாடசாலையின் வளர்ச்சியின் அளவுச்சுட்டிகளில் கல்விப் பெறுபேறுகளும் முக்கியத்துவம் வகிக்கின்றன. யாழ்.நகரில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் பாடசாலைகளில் எமது பாடசாலையும் இனம் காணப்படும் அளவுக்கு இவருடைய தன்னிகரில்லாச் சேவை அமைந்திருந்தது.

மாணவரின் கற்றல் கருமத் தொடர் செயலூக்கம் மிக்கதாக அமையவேண்டு மானால் களப்பயணங்கள் அவசியமாகிறது. இடங்களைத் தரிசனம் செய்து கற்றலை வீரியமுள்ளதாக்க அமையும் செயற்பாடுகளை பாடசாலையில் மேற்கொண்டவர். அந்த வகையில் க.பொ.த உயர்தர மாணவர்கள் கல்விச் சுற்றுலாவினை தன் தலைமையிலேயே அழைத்துச் சென்றார் . அது போன்று மாணவ தலைவர்களுக்கான களப்பயணங்களையும், சாரணர்களுக்கான களப்பயணங்களையும் திறம்பட மேற்கொண்டார். அதிபர், ஆசிரியர், மாணவர் பெற்றோர் பழைய மாணவர் என கூட்டிணைப்பின் ஊடாக பாடசாலை நிர்வாகத்தைக் கட்டியாண்டவர்.

பாடசாலையில் நடந்தேறும் எந்த நிகழ்வுகளிலும் ஆசிரியர்கள் மாணவர்கள் சுயாதீனமாக சுதந்திரமாகத் தமது செயற்பாடுகளைச் செய்வதற்கு அனுமதி வழங்குவதோடு அந்நிகழ்வுகள் நேர்த்தியாய் அமைவதற்குத் தனது ஆலோசனைகளையும் வழங்குவர். திருக்குடும்ப கன்னியர் மட பாரம்பரியக் கட்டுக்கோப்புக்கள் சட்ட திட்டங்கள் மிக இறுக்கமாக கடைப்பிடித்தவர் அதேவேளை சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப, தன் பணியாளர்களுக்கு சலுகை களையும் வழங்கத் தவறுவதில்லை.

ஆசிரியர்களின் நலன்களைக் கவனிக்கும் விடயத்திலும் இவர் அதிக சிரத்தை எடுத்து செயற்பட்டவர். ஒவ்வொரு ஆசிரியரையும் தன் குடும்ப அங்கத்தவராக

நினைத்துக் கொண்டு அவரவர் குடும்ப சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்வதில் சிறந்த ஒரு அருட்சகோதரியாகவே நாம் அவரை இனம்காண முடியும். ஆசிரியர்கள் நிர்வாகத்துடன் முரண்பாடுகள் எழுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் தன்னுடைய நிர்வாகக் குழுக்களின் கலந்தாலோசனையுடன் தீர்மான முடிவுகளை எடுப்பதனூடாகப் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தபோதும் அதனை தற்துணிவோடு எதிர்கொண்ட மனம் தளராத அதிபராகவே அவரை நாம் இனம் காண முடியும்.

சிறப்பாக நோக்கும் போது விளையாட்டுத்துறை ஆங்கிலம், தமிழ், கணித, விஞ்ஞானத் துறைகளில் அதாவது இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் புத்தூக்கத்துடன் செயற்படுவதற்கும் மாவட்ட மட்ட மாகாண மட்ட தேசிய மட்டங்களின் பரிசில்களைத் தட்டிச் செல்வதற்கும் அதிபர் அவர்கள் ஓர் ஊக்கியாகவே செயற்பட்டார் என்றால் மிகையாகாது.

தன்னுடைய அறப்பணியாலும், கல்விப் பணியாலும், ஆன்மீகப் பணியாலும், சமூகப் பணியாலும் யாழ். நகரில் பண்பாட்டுச் சீரழிவால் சிக்கித் தவிக்கும் எமது சமூகத்தை நேரிய வழியில் வழி நடத்துவதற்குத் தனது பங்களிப்பை நல்கி சிறந்த மனிதநேயப்பண்பு மிக்க மாணிடராக எம் பாடசாலைச் சமூகத்தின் மனங்களில் நீங்காத இடம்பிடித்து நிற்கும் அருட்சகோதரி நெவிஸ் அவர்களோடு நான் பணியாற்றியகாலம் பசுமையானகாலம், இனிமையான காலம்.

இப்பாடசாலையின் பல்துறை வளர்ச்சிக்கும் உரமிட்ட அதிபர்கள் வரிசையில் அதிபர் அருட்சகோதரி நெவிஸ் அவர்களுக்கும் அழியாத இடமொன்று இருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தின் ஓய்வு பெற்ற ஆசிரியராக எனது நன்றிகளை அவர்களுக்கு காணிக்கையாக்கி அவர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் தேக ஆரோக்கியத்துடன் அவரது ஆன்மீகப் பணி சிறந்து விளங்கவும் என் வாழ்த்துக்கள்.

**திருமதி ர. அச்சுதம்பிள்ளை,**
ஓய்வுபெற்ற ஆசிரியர்,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.

## சேவையை வியந்து...

உலகியல் துறந்து
மெய்யியல் இணைந்து - நீவீர்
கல்வியியல் துறைக்கு
ஆற்றிய சேவை - போதும் என்று
காலந்தான் கூறிற்றோ!

காலம் எவ்வளவு வேகமானது - என
உணர்கின்றோம் - இன்று
காலத்தின் கட்டளையை - யார்
மறுக்க முடியும் எனினும்..

உமது சேவைக்காலத்தின் போது
கடமையை நிறைவேற்றுகையில்
எத்தனை இன்பங்கள்
எத்தனை இடர்கள்
தளர்ந்து விடவில்லைத் - தாங்கள்

எடுத்த கருமம் நிறைவே, ஆற்றும்வரை
கண்ணும் கருத்துமாக
சொல்லிலும் செயலிலும் - கண்டிப்பும் கனிவும்
உணர்பவர்க்குப் புரியும்!



இருமுகங்களுடன் பாடசாலை வளாகத்தில்
நீவீர் வலம் வந்தீர்
அலுவலகம் சென்று ஆசனத்தில் அமர்ந்ததும்
நாம் காணும் முகம் - ஒன்று
அலுவலகம் விட்டு வெளியேறி சுற்றுலாக்களிலும்
விழாக்களிலும் நாம் காணும் முகம் - மற்றொன்று
இருமுகமும் சற்றேனும் ஒன்றுடன் ஒன்று
தொடர்பில்லா - ஒரே முகம் தான்!
என எண்ணுகிறோம் நாம்!!

*பாடசாலை உயர்வு கண்டு - பெருமிதம் கொண்டீர்*
*வளங்களைப் பாதுகாப்பதில் பாதுகாவலனானீர்*
*ஆசிரியர் குழாத்திற்குப் பலபோது - அதிபராகவும்*
*சிலபோது - அன்னையாகவுமானீர்*
*எமது குழாத்தின் மகிழ்வினிலும் - பங்கு கொண்டீர் ஆனால்*
*துன்பத்தின் போது பங்கு கொள்ள மறந்ததே இல்லை - தாங்கள்*
*இறுதி வரை உமது சேவையில் கண்ணாகி இருந்தீர்*
*அதன் கனிதான் பாடசாலை தேசிய பாடசாலையாக உயர்ந்தது.*
*இன்னும்பல உயர்வுகள் கிட்டட்டும் - உங்களுக்கு*

*கல்விச் சேவையில் இருந்து - விடைபெற்றாலும்*
*நீவீர் ஆற்ற வேண்டிய பெரும் சேவை ஒன்று*
*காத்திருக்கிறது - உங்களுக்கு*
*அத்தனையிலும் நிறைவு கண்டு*
*நீண்ட ஆயுள் கண்டு*
*வளமுடன் வாழ்வு கண்டு வாழ*
*இறை ஆசி கிடைக்கட்டும் தங்களுக்கு!*

திருமதி S. அற்புதகுமார்
க/கதிரேசன் மத்திய கல்லூரி
நாவலப்பிட்டி.



# பாராட்டுச் செய்தி

எமது பாடசாலையில் கடந்த ஏழு வருடகாலமாக அதிபராகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தலைவராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள அருட்சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் அவர்கள் தனது பணிக்காலத்தில் பாடசாலையின் கல்வி, கலை, விளையாட்டுத்துறை, அபிவிருத்தி போன்றவற்றில் சரியான பாதையில் அடித்தளமிட்டு நேர்சீராக வெற்றிநடைபோட வைத்தவர். அதுமட்டுமல்ல மாணவர்களை ஒழுக்க ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் வழிநடத்தி அரும்பெரும் பணியாற்றி வியக்க வைக்கும் கட்டுக்கோப்புடன் கட்டிக்காத்தவர், வளர்த்தவர். இது காலத்தின்கட்டாய தேவையாகவும் அவசியமாகவும் எம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமும் கூட... எமது பாடசாலையில் மிகவும் வறுமைக்குட்பட்ட நிலையில் உள்ள மாணவிகள் தேவைகள் கருதி பல்வேறு கோணங்களில் அவர்களுக்கு உதவிசெய்து அவர்களை அன்போடு அரவணைத்து, அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்து அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குத் தன்னாலான முழு ஒத்துழைப் பையும் , பங்களிப்பையும் நல்கி , தனது இரக்கத் தன்மையையும் , மனித நேயப் பண்பையும் வெளிப்படுத்திய விடயங்கள் இன்னும் எம்மை ஈர்த்து நிற்கின்றன. பாடசாலை நலன் சார்ந்த , மாணவர்களின் நலன் சார்ந்த, ஒவ்வோரு விடயத்திலும் இவர் அறிவுபூர்வமான சிந்தனையோடு ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு ஆளுமையுள்ள ஓர் ஆற்றல்மிக்க சக்தியாக விளங்கியவர். இவர் பணியாற்றிய காலமானது போர்க்காலச் சூழல் நிறைந்த மிகவும் நெருக்கடியான காலகட்டமும் கூட. கடத்தல்களும், கொலைகளும், கொள்ளையர்களும் அதிகரித்து இருந்த அந்தக்காலகட்டத்தில் அத்தனை மாணவர்களையும் ஒழுங்காகப் பாடசாலைக்கு வர வைப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து தனது சொந்தப்பிள் ளைகளைப் போல் அவர்களை வழிநடத்தி அவர்களுக்காகப் பாடசாலையில் நின்று இரவு பகலாக உழைத்து அர்ப்பணிப்போடு சேவையாற்றியதையும் நாம் இலகுவாக மறந்து விட முடியாது. ஓய்வு என்பது காலத்தின் கட்டாயமாக்கப்பட்டதால் அவர் இன்று ஓய்வு பெற்றுள்ளார். அருட்சகோதரி அவர்களை அன்றும் இன்றும் இறைவன் ஆசீர்வதித்தது போல் என்றும் ஆசீர்வதித்து உடல் , உள ஆரோக்கியத்தை நிறைவாக வழங்க வேண்டும் எனப் பிராத்திக்கிறேன்.

**கே. என். விந்தன் கனகரத்தினம், J.P,**<br>
யாழ். மாநகர சபை உறுப்பினர்,<br>
அபிவிருத்திக் குழு செயலாளர்,<br>
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை.

# Jaffna Holy Family Convent

## Alumni Association Sydney, Australia

# Message from Australia

It gives me great pleasure to send this message to Rev. Sr.Ladislaus on her retirement as principal of Holy Family Convent (HFC), Jaffna Srilanka.

Sr Ladislaus took up the position as principal of HFCduring the time when the country was ravaged by war . Nevertheless, she set a high standard for herself and expected the same from her students and staff . She was a committed and tireless worker who worked hard for the upliftment of HFC. During her tenure as principal she has raised the standard of HFC and was very proud of the achievements of her students.

Sister has been in contact with our association for funding to support various projects designed to provide the best possible resources for her students. As HFC familians, we are very proud of our heritage and cherish the honour of the great institution which we were a part of. The alumni believe that it is our obligation to help the present generation of students at HFC . WE are proud to have done so and will continue doing so

Sister was a visionary - Strong and charismatic in her leadership . She will always be fondly remembered by us. On behalf of all familians form Australia We wish her a happy healthy and long retirement.

May god bless her
Marie Pathinather
President
Holy family convent Alumini Association
SYDNEY AUSTRALIA

# Jaffna Holy Family Convent

**Alumni Association Canada**

# Message from Canada

During my presidency from 2008 to 2010 , I had the privilege - along with my committee- of working remotely with Sister Nevis, serving the jaffna Holy Family Convent Alumni Association, as the Canadian liaison.

Through her directoin and our collective efforts in Canada, we were able to send numerous funds llowing her to use them in the best way possible.

We thank haer for guidance and efforts in the use of this money and the physical direction she gave to all around her.

It was through our writings with Sister Nevis that we grew to respect and admire the work and the efforts of this lady who worked tirelessy in a war torn area supervising the clerical staff, the teachers and all the grils who had their future in front of them.

It was and is a demanding job on an ongoing basis.

We Salute her and recognize that her absence will be felt with by every one who had the pleasure of her acquaintance.

The "Jaffna Holy Family Convent Alumni Association of Canada" wishes her well in all future endeavors and blesses her with peace.

With warmest wishes to everyone .

**Vijitha Valentine**

Presdient 2008-2010

on behal of Jaffna Holy Family Convent Alumni Association, Canada

# Jaffna Holy Family Convent

## past pupil Association UK Branch

# Message from UK Branch

Jaffna HFCPPA UK Executive committee sends its best wishes to Sr. Ladislaus for a very happy retirement after 7 years of dedicated service. Sr. Ladislaus has significantly contributed to the continued success of the school since she took over the principal post from Sr. Yolande in the year 2004.

At the time of taking on the post the school was at the early stages of the merger of Tamil Convent with Jaffna Holy family Convent. To many this would have been too much to take on while starting a new post. However Sr. Ladislaus overcame this challenging responsibitility and soon set to work maintaining and enchancing the reputation of the school.

Sr. Ladislaus 'creative and innovative ideas coupled with her good management have brought our school to a very high standard both academically and in extracurricular activities.

During her time as principal she has encouraged extracurricular activities to further enhance the educational experience of the students. The students have entered sports competitions and been successful. One such success have been the basketball team , wich has been the best team in the Jaffna district for the last seven years, and has regularly competed at national level. Students were also entered into drama competitions and have won prizes.

Sr. Ladislaus has also shown great financial acumen by managing the funds received from the overseas post pupil Association prudently. The money has been put to good use including renovating and improving school blocks, in vesting in computers and redecorating the indoor stage.

The hard work of Sr. Ladislaus to develop a conducive environment for children to learn has resulted in many students gaining places at university. Sr. Ladislaus' commitment to provide students a well-balanced education despite the difficult situation in the country should be commended. This has not only maintained the high standard of the school but give our children hope and a chance to fulfil their dreams.

We all wish Sr. Ladislaus a long and happy retirement . May Almighty bless her with good health so that she can carry on her good service to the community.

*Malliga Baladasan*
*president JHFCPPA UK*

# Message of St.Patrick's College Principal

I am delighted to convey my warm greetings to Rev. Sr. Mary Thasnevis Ladislaus as she relinquishes her service at holy family Convent Jaffna.

Holy Family convent , the partner school of St. Patrick's college, is a source of encouragement and supportive institution to theJaffna society. Time to time God has been giving effcient and dedicated principals to the school. Following the footprints to the predecessors, Sr. Nevis has created a history by her enormous contribution to the school. It's obvious, as a Religious person, a Teacher and a Principal , Sr. Nevis has rendered a note worthy service to the education of the children in the districts of Killinochi, Mannar, and Jaffna as Well.

Having possessed with the necessary educational qualifications she has also utilized her personal talents in music, psycholgy and counselling which immensely helped in the formation fo students.

Indeed , the Holy family Convent blossoms out in tis Educational field and Sports with a lim ited space, and resources in Jaffna District , Zonal and National Level at large. There is no doubt that the key person behind all this success is Sr. Nevis, the Principal who is respected by the staff students.

I am proud of being a contemporary principal of her time at St. patrick's College the partner School. We Share the same tradition, mission and the goal.

Well done! congratulations for your successful ministry at H.F.C.I feel content that you join the thousands of hearts in whom you have lift the flame of love and wisdom.

May the lord reward you for the pain and the seed you had sown in the field of education.

*Rev. Fr. M. Jero Selvanayagam*

*Rector*

# மாணவர் போற்றிடும் மாண்புமிகு அதிபர்

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அதிபர் அருட்திரு சகோதரி மேரி தஸ்நெவிஸ் வடிஸ்லஸ் அவர்கள் 23 வருட கல்விச் சேவையை நிறைவுசெய்து இன்று ஓய்வுபெற்றுச் செல்கின்றார். அன்பிற்குரிய அதிபர் அவர்களது கல்விப் பணியினைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுவதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

மதிப்பிற்குரிய அதிபர் அவர்கள் தனது கல்விப்பணியில் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட அதிபர் அவர்கள் பாடசாலைக் கல்வி, உயர்கல்வி, என்பனவற்றை நிறைவுசெய்த பின்னர் முன்பள்ளி ஆசிரியராக, மறைக்கல்வி ஆசிரியராக , விடுதி மேற்பார்வையாளராக, அதிபராகப் பல பாடசாலைகளில் தனது பணியினை மேற்கொண்டார். கல்வியில் மட்டுமல்ல, மாணவரது ஒழுக்கத்திலும், நலனிலும் மிகவும் அக்கறை கொண்டவராகவும் விளங்கினார். சங்கீதத்தில் திறமையும் ஆர்வமும் உடைய அதிபர் அவர்கள், மாணவிகளுக்கு வழிபாட்டுப் பாடல்களைப் பழக்குவதில் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். மாணவர் மீதும், ஆசிரியர் மீதும் அதிபர் அவர்கள் காட்டிய அன்பும் அக்கறையும் கண்டிப்பும் பாடசாலையை மேன்மைப்படுத்தின மாணவரை நல்வழிப்படுத்தின.

தனது வாழ்வினைத் துறவறத்திற்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் அர்ப்பணிப்புச் செய்த அதிபர் அவர்கள் நல்லதொரு ஆசிரியர் மட்டுமல்ல சிறந்ததொரு நிர்வாகியும் கூட. அவரது நிர்வாகத்தின் மேன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக யா / திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடாசலையாக உயர்த்தப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

சிறப்பும் மேன்மையும் கொண்ட அதிபர் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ ஆண்டவனை இறைஞ்சுகின்றேன்.

திருமதி. D. துஷிதரன்
அதிபர்,
யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# Note of Appreciation

I am pleased to send this message to the souvenir to felicitate the devoted Rev.Sr.Mary Thasnevis Ladislaus who had been the Principal of J/Holy Family Convent for the past eight years.

Sr.Mary Thasnevis was born in Sembiyanpattu, Vadamaradchi a famous place for intellectuals as the third child with three brothers and two sisters. Being a trained graduate she has Diplomas in Scripture and in Counseling as well. To promote her dedicated Christian saint life, she acquired her first dedicated Christian saint life, she acquired her first dedication in 1972 and eternal dedication in 1980 and began her life as a teacher and served in various schools. Her dedication to duty and handwork was soon devoted to the grade of Principal and joined Holy family Convent as the Principal in 2003. As a neighboring school Principal I closely moved with her from that day.

She always possesses clear thoughts, efficiency in work, sacrifice, dedication and love on humanity. With these characteristics. She Participated in Various Services towards the school and Community. Her efficiency in Music enabled many students to be trained well in Christian songs.

To occupy the position of Principal of a school, and to Maintain the high standards of the school and improve them required extraordinary talents. Rev.Sr.Nevis Possessed these talents in abundant measure. Performances at public examinations of the College improved and thus the school received the National school status last year and brought credit to her service.

She is always a strong pallor in our Society. I wish her good health and happiness in her retired life. The blessings of God will be always with her.

**Mrs. k. Ponnamplam,**

*J/ Vembadi Girls High school.*

## ஆளுமைமிக்க அதிபர்

*கடமை,கண்ணியம், கட்டுப்பாடு என்ற கட்டுக்கோப்புக்குள் தம் சேவையை தேவையறிந்து நிறைவேற்றும் அருட்சகோதரியின் மணிவிழாக்கண்டு மகிழ்வுறுகிறேன். 1972 இல் துறவறம் மேற்கொண்டு தம் வாழ்வை தாம் வாழும் சமூகத்திற்கு அர்ப்பணம் செய்த அவர்கள், தம் சேவைக்குப் பொருத்தமான ஆசிரியர் பணியைத் தம் பணியாகத் தேர்ந்தமை மிகப் பொருத்தமானது. இளம் துறவியாய், முன்பள்ளி ஆசிரியராக, மறைக் கல்வி போதிப்பவராக, திருவழிபாட்டுப் பாடல்களை பயிற்றுவிப்பவராக சமூகப்பணியில் பிரவேசித்தார். எழுத்தறிவித்தலின் உன்னதமறிந்த இவர் முழுநேரக் கல்விப் பணியை மேற்கொண்டு பயிற்சி ஆசிரியராக, ஆசிரியராக, அதிபராக இன்று உயர்ந்து நிற்பது அவர்தம் பணிக்குக் கிடைத்த வெகுமதி. மாணவர் தொண்டை மகேசன் தொண்டெனக் கொண்டு, மாண்புறு பணிகளாற்றி யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட வளர்ச்சிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த அருட்சகோதரி அவர்கள், ஆசிரியர்க்குரியது அறிவுடைமை மாணவர்களுக்குரியது நல்லொழுக்கம் என்பதில் அசையா உறுதியோடு அரும்பணியாற்றியவர். அவர் பணியின் சிறப்பே அவர் காலத்தில் திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசியப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. மக்கள் பணியில் மகிழ்வுறும் இவர் ஓய்வுகாலம் சிறப்புற வாழ்த்துக்கள் வழங்கி அமைகிறேன்.*

**ஓங்காரமூர்த்தி,**<br>
**அதிபர்,**<br>
**யாழ். மத்திய கல்லூரி.**

# Message of Felicitation

I am pleased to send this message of feliciation of Rev. Sr. Mary Thas Nevis ladislaus. H.F for the souvenir to the Published as tribute, on her retirement from service as principal of Holy family Convent ,Jaffna .

As the principal of this greart institution Rev. Sr. Nevis has sacrificed her immensely to serve as a beacon light to guide the students of Jaffna socety. Holy family convent is a one of the leading girls' school in Jaffna with a rich heritage . She had been instrumental in making the instiution forge a head uplifting it to the status of a National school. During her tenure as the principal the school excelled not only in studies but also in a variety of co-curricular activities. In her time the students won many prizes inTamil day competition as well as for English day competition and went up to National level.

I'm happy to note that during her period the Holy Family Convent has given to our society many religiuos sisters, doctors, engineers ,accountants, teachers and , many other professionals. I know Sr. Nevis faced many challenges, and problems during her term of office but she faced them courageously with the strength she received from God. Sr. Nevis is endowed with so many beautiful qualities and blessed with a spirit of service to her fellowmen . As a Principal all her efforts were centered on the progress of the institution placed in her care. I wish her health and happiness in her retirement. And beseech the good God to reword her for her service to him and to the community.

**Rev. Sr. Jeevanthi AC**
*Principal of J / St. John Bosco's Vidyalayam.*

# பிரியாவிடை நாயகிக்கு ஓர் வாழ்த்து

கடலலை பொங்கியெழும் வளம் கொழிக்கும்
செம்மையுறு செம்பியன் பற்று கிராமத்து
அருள்பொழிவுறு பிலிப்பு நேரியார் புனிதர் பதி
மறை சாற்றும் பண்புறு குடும்பப் பூங்காவில்
சீர்மிகு தலைவன் பிலிப்பு லடிஸ்லாஸ்
கரம்பிடித்த மாண்புறு தலைவி பிலோமினா
ஈன்றனள் செழுமை மிகு மகவுகள் அறுவர்
அறுமலர்களில் வெண்மலராய் இறையவனுக்கு
அர்ச்சனை சாற்றப் பிறந்தார் பாங்குடன்
அன்னை மரி நாமம் சூழ மேரிதஸ்நெவிஸ் நாமம்
சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர்

மழலை மொழி சொரிந்து சுற்றம் மகிழ
கல்வியில் பாங்குடன் அறிவொளி பெருகிட
செம்பியன்பற்று பாசையூர் றம்பைக்குளம் கல்வி
சாலையில் தடம்பதித்து உயர்கல்வியும் பயின்றீர்



யாழ் பல்கலைக்கழகம் புகுந்து
முதற் தரக்கலை மாணிச் சித்தி எய்தி
கல்வியில் வாண்மை உயர விசேடமாய்
உயர்கல்வி சித்தியெய்தி முதுகலை மாணியாகி
கற்றல் பரப்பினை விரிவு செய்து
சமுகப் பணியில் நெருடல் போக்க
ஆலோசனை வழிகாட்டலில் விசேடமாய்
சித்தி எய்தி கலங்கரை விளக்கென நின்று
நாவால் இறை துதிபாடி இசையில் மிளிர
கீதமும் சிறக்கக் கற்று கல்விப் புலத்தில்
ஆளுமையில் பல்லுருவமும் பெற்றீர்

இறை அழைப்பின் குரல் கேட்டு
ஏழ்மை கற்பு கீழ்படிதல் எனும் வாக்குறுதி ஏற்று

திருக்குடும்ப கன்னியர்சபையில் நறுமணம் வீசிட
அருட்பணியில் நித்திய அர்ப்பணமும் பெற்றீர்

உயர் ஆசிரிய பணியேற்று மாணவ சமுதாய உயர்வு காண
கல்விச் சாலைகள் பலவும்பணியால் நனைத்து
வாண்மை சிறக்க அதிபர் பணியேற்று
தூய அன்னாள் சாலையில் ஓர் தசாப்தம் பணி கடந்து
திருக்குடும்பக் கன்னியர் மடம் ஈங்கு முதல்வர் பணியேற்றீர்
நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை யார்க்கும்
அஞ்சிடா நிலையென அதிபர் என மிளிர்ந்தீர்

நிர்வகிப்புத் திறமை கொண்டு கல்லூரி சிகரம் தொட
நின் உழைப்பினை உவந்தளித்து தேசிய பாடசாலை என
கல்லூரி சிறப்புற மொழிந்தீர்
ஆளுமை முதல்வராய் வெற்றிகள் பலவும் கண்டு
வழிப்பயண இன்னலிலும் உரமுற நின்று விழுதானீர்

துறவற வாழ்வின் பரிமாணம் ஏற்று
மாண்புறு பணிகள் மகத்தாய்ப் புரிந்தீர்
கல்விச் சாலையில் ஓய்வுறும் நின்பணி
நலிவுற்ற சமுதாயத்தின் துயர் துடைத்து
கிறிஸ்து மறை சாற்றி உடல் உள பலம்பெற்று வாழிய வாழியவே!

**திருமதி மே.டி.யூட்டிரவிநாத்**
ஆசிரியர்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்



# முகவரி தந்தவர்

தரணி இன்று தகவல் யுகத்துள் பிரவேசித்து தட்டுத்தடுமாறி முட்டி மோதி மாறும் சிந்தனைப் போக்கிற்கேற்ப மாற வேண்டிய சூழலில் இருப்பிற்காய் முகவரி தேடும் காலமிது.

நூற்றைம்பது வருடப் பாரம்பரிய நிழலில் முகவரி பெற்ற காலத்திலிருந்து திருக்குடும்பமெனும் கல்வி நிறுவனத்தை கல்விப் போக்கிற்கேற் கட்டிக்காத்து முகவரி தொலைக்காமல் பாதுகாத்த அதிபர்கள் வரிசையில் இன்று அகவை அறுபதினால் பணியை வேறொரு அதிபரிடம் கையளித்த அருட்சகோதரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் முகவரிக்கு முகவரி தந்தவர்.

மனித நாகரீக வளர்ச்சி தோற்றுவித்த நிறுவனங்கள் தமது பணிகளை ஆற்றுவதற்கு, நல்ல தலைமைத்துவப் பண்புள்ளவர்கள் தேவை. அயர்லாந்து கன்னியர்களின் தூர நோக்கான சமூகப் பணிகளின் மையப் புள்ளியாக விளங்கும் பாடசாலைக்கு நிர்வாகத் திறனுள்ள தலைமைகள் தேவைப் பட்டன. நம் அருட்சகோதரி அத்தகைய ஆளுமையுள்ள தலைமைப் பண்புகளைப் கொண்டு மிளிர்ந்தார்.

நல்ல தலைவனுக்குத் தொடர்பாடல் திறமை இருக்கவேண்டும். இவர் தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் அதிக மொழியாற்றல் கையாளப் பெற்றவராய் விளங்கியதால் பிறரோடு தொடர்புகளை ஏற்படுத்தவும், வளங்களைத் தேடிப்பெற்றுக்கொள்ளவும் இலகுவாக விடயங்களைத் நகர்த்திச் செல்லவும் முடிந்தது, இவரிடம் காணப்பட்ட நுண்ணறிவு, நிபுணத்துவம் பாடசாலைக்குத் தேவையான நல்ல தொடர்பாடல் அம்சங்கள் பாடசாலையைத் தரமுயர்த்த உதவியது.

இவருக்கு கல்வியினால் கிடைத்த தன்னம்பிக்கை, பெற்றோர் வழி வந்த நேர்மை, தொடர் சேவையால் பெற்ற அனுபவம், நல்ல சிந்தனைப் போக்கு, துறவற வாழ்வின் ஒழுக்கம், இயற்கையாகவே மானிடத்தின் மீது கொண்ட பரிவு, அவ் அக்கறை தந்த மற்றவர் துயரில் பங்கு கொள்ளும் மனப்பாங்கு நல்ல தலைமைத்துவ வழிகாட்டியாய் மிளிர்வதற் கான பண்புகளைத் தன்னுள் கொண்டிருந்தார்.

நல்ல நிர்வாகி ஒழுங்கமைக்கும் ஆற்றலுள்ளவராய் இருக்கவேண்டும். இப்பாடசாலையின் ஒவ்வொரு நிகழ்விலும் தன் முத்திரையைப் பதித்தார். ஆசிரியர் மாணவரை ஒருங்கிணைத்து ஒவ்வொரு செயலிலும் புதுமையைத் தந்தார். ஆசிரிய வளத்தைக் கவனமாகக் கையாண்டார். வேலைப் பகிர்வினை ஏற்படுத்தி அவ்வத் துறைசார் நிபுணத்துவத்திற்கான பயிற்சிகளைப் பெறவைத்து அவர்கள் திறமைக்கேற்ப பணிகளை ஒப்படைத்தார். அத்துடன் பணிகளின் சிறப்பைக் கண்ணுற்ற போது பாராட்டுதல்களை வழங்கி ஊக்குவித்தார். காலமாற்றங்களைப் புரிந்து அற்கேற்ப வளங்களைப் பெற்றுக்கொடுத்து ஆசிரிய வாண்மை விருத்தி மூலம் பாடசாலையின் தரத்தை உயர்த்தினார்.

ஆசிரிய ஆளணி மாத்திரமன்றி மாண வர்களை நல்ல வெளியீடுகளாக அனுப்புவ தற்காகவும் உழைத்தார். கல்வி மூலம் மாணவர் மானிடத் தகைமைத் திறனுள்ள வர்களாக வளர்வதற்கு வேண்டியன செய்தார். ஆசிரிய மாணவர்களுக்கு நம்பிக்கைக்குரி யவராக இருந்து களப்பயிற்சி, சுற்றுலா, கருத்தரங்கு தலைமைத்துவப் பாசறை எனப் கல்வி நோக்கத்தை அடைவதற்கான அத்தனை கதவுகளையும் திறந்து மாணவரைப் பயிற்றுவித்தார். தட்டிக்கொடுத்தல், பாராட் டுதல், புகழுரை மூலம் உற்சாகப்படுத்தல் என மாணவர், ஆசிரியரை சோர்வில்லாமல் நடத்திச் சென்றார்.

பாடசாலை பெற்ற ஆசிரிய மாணவ வளங்களை உருவாக்கியது மட்டுமல்லாமல் பாடசாலையின் தரம் குன்றாமலும் கவனித்துக் கொண்டார். இயற்கை அனர்த் தங்கள் போன்ற இடர்கள் தாக்கிய வேளை சொத்துக்களைப் பேணும் திறமை உடைய வராய் திகழ்ந்து பாடசாலை உள்ளீடு களைக் காப்பாற்றினார்.

பெற்ற வளங்களை இழக்காததோடு புதிய வளங்களைத்தேடி அலைந்தார். பாடசாலையின் தர நிர்ணயத்திற்கு வளப்பற் றாக்குறை தடையாகாமல் பார்த்துக் கொண் டார். பாடசாலையின் முக்கிய நோக்கமான நல்ல வெளியீடாத மாணவரை மாற்றுகின்ற எல்லா விடயங்களிலும் கவனம் செலுத்தி னார். ஒவ்வொரு பிள்ளையும் திருக்குடும் பத்தின் முத்திரையோடு வெளியேறுவது கண்டு பெருமிதம் கொண்டார்.

"எந்தவொரு உற்பத்திப் பொருளினதும் தரம் தொடர்பான பொறுப்பில் 85 - 95% அந்நிறுவனத்தையே சாரும் " என்ற தரவிருத்தி பற்றிக் கூறிய டேமிங்கின் கூற்று இவர் காதில் எந்நேரமும் ஒலிக்கும் போலும்.

சமூக அசைவியக்கத்தில் கல்வியின் பாத்திரம் மிக முக்கியமானது. தன் தலைமைத்துவப் பண்பால் உயிர்த்துடிப்புள்ள அசைவியக்கமுள்ள பாடசாலை நிர்வாகத்தை கொண்டுசெலுத்திக் கல்வியின் தரத்தோடு ஏனைய விடயங்களிலும் அக்கறையாக இருந்தார். பாடசாலை வெளியேற்றும் மனித மூலதனம் தரமுள்ளதாகத் திகழக் கல்வியோடு கூடிய விளையாட்டு, கவின்கலைகள், தலை மைத்துவம் என்பவற்றுக்கான அடித்தளங் களை இட்டு கட்டி எழுப்பினார். இதன் சாதனைகளை வரலாறாகப் பாடசாலை பதிவுசெய்து பிறர் பார்வையில் விழச் செய்துள்ளது.

பாடசாலையின் வாடிக்கையாளரான மாணவன் பல்வேறு; சூழலில் பல்வேறு குணாம்சங்களோடு வருபவரை மாற்றி ஏதோ ஒரு துறையில் நிபுணத்துவம் பெற வைக்கும் செயற்பாட்டில் தலைமைத்துவத்திற்கு இருக்கும் பொறுப்புணர்வு மிகவும் காத்திர மானது. தகவல் தொழில்நுட்ப யுகத்தில் தற்போது யாழ்ப்பாணத்தின் தடுமாறும் கலாச்சார முரண்பாட்டில் சிக்குண்டு நிற்கும் இளம் சமூகத்தைப் புடமிட்டு வெளியே அனுப்புவதற்கு வலுவான உடல் - உள அமைப்புத் தேவை. தான் சார்ந்த துறவற பலம்தந்த இறைநம்பிக்கை, அவரோடு பிறந்த தலைமைத்துவப் பண்புகள் மாணவரை நல்ல மனிதனாக வெளியே அனுப்புவதற்கு உதவியது.

கால மாற்றங்களைப் புரிந்து சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானங்களை எடுத்து

நேரம் தவறாமை, தூய்மை, வாய்மை எனும் பண்புகளைக் கடைப்பிடித்து தன் நிர்வாகத் திறனினால் மாணவர் நெறிபிறழாது நல்லொழுக்கம், பக்தி, பிறரை மதித்தல் போன்ற பண்புகளில் வளரச்செய்து சமூக சவால்களைச் சந்தித்து, வெளிவர உதவினார். இதனால் மாணவரின் உடல் - உள ஒருமைப் பாடு சிறப்பாக அமைய வழிகாட்டினார். இத்துடன் அவர்கள் உள்நுழைந்த நோக்க மானமாகக் கல்வியை இத்தகைய பண்பு களோடு பெற்று வெளியேற நவீன உத்தி களைக் கையாண்டு தவறுகளைத் தடுத்து தோல்வி களைக் குறைத்தார்.

இதனால் பாடசாலையின் தரத்தை உயர்த்தினார். தரவிருத்திக்காக ஆசிரியர் களை வினைத்திறனுள்ளவர்களாக மாற்றிய தோடு அர்ப்பணிப்பு உணர்வோடு சேவை யாற்ற வைத்து எதிர்கால எமது சந்ததியினரின் ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டினார். பாடசாலை வரலாற்று ணர்வுடன் நீண்ட நோக்கில் தன் சமூகப் பொறுப்பை உணர்ந்து தன் இன்னல்கள் இடர்களை மறந்து சேவை மட்டும் மேலோக்காகக் கொண்டு பாடசாலையின் தரத்திற்கு அவர் கொடுத்த விலைகள் உணர முடியாதவை.

பாடசாலையின் தரம் கண்டு பாராட்ட முடியாதவர்களின் தடைக்கற் களைத் தள்ளி வைத்து சாதனை நாயகியாய் வலம்வந்த வலிகளைத் தாங்கிய புதுப் பிறப்பாய் நின்று மானிடத்தின் மலர்ச்சிக் காய்த் தன்னைத் தந்தவர்.

எவ்விடர் வந்த போதிலும் அறிவுச் சூழலை உருவாக்கும் எதிர்காலத் தேவை உலகை நோக்கி பாடசாலையை நகர்த்தினார். தரமான கல்வி மூலம் பண்புசார் விருத்தியை ஏற்படுத்தித் தன் தலைமைத்துவப் பொறுப்பை சிறப்பாகச் செய்து ஓய்வு பெறுகின்றார்.

இவர் புத்தாக்கச் சிந்தனையாளர். நல்வழிப்படுத்துபவர், இயக்குநர், முன் னோக்குச் சிந்தனையாளர், நிபுணத்துவ இறை வல்லுநர், வழிகாட்டி எனப் பல பாத்தி ரங்கள் கொண்ட முழு நிறைவான மானிடத் தலைவியாய் மிளிர்ந்து தரத்திலும் உறுதிப் பாட்டிலும் திருக்குடும்பத்தை நிலை நிறுத்தியுள்ளார்.

இணைப்பு மூலம் ஒன்றிணைக்கப் பட்ட பாடசாலையைத் தேசிய பாடசாலை யாகத் தரமுயர்த்தி சமூகத்தில் நின்று நிலைக்கும் நிறுவனமாக முகவரிக்கு முலாம் பூசியுள்ளார். பிரகாசிக்கும் இந்த ஒளி மங்கிடாதிருக்க இறைவனோடு ஒன்றிக்கும் ஒவ்வொரு கணமும் எமக்காகச் செபிப்பார். தன் வேர்வையில் பாடசாலைக்கு நறுமணம் கொடுத்த இவர் இனிவரும் காலங்களில் மன அமைதியோடு உடல் உள ஆரோக்கி யத்தோடு மாற்றம் பெறும். வேறு பணியைச் சிறப்பாகச் செய்ய இறைவனைப் பிரார்த்திப் போம்.

"திருக்குடும்பத்தின் முகவரியே
திசை தோறும் உம் குழந்தைகள்
திக்கெட்டும் புகழ்பரப்பி இறைவன்
திருமுகம் மலரச் செய்வர்."

செல்வி. மே. பூ. பெனடிக்ற்,
உபஅதிபர், யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்.

# பல்லாண்டு வாழ்க

கடவுள் கொடுத்த வரம் கன்னியர் மடம் -அது
நமக்குத் கொடுத்த கொடை Rev . sister Nevis
உம் கண்களிற்குள் தெரிவதே
கருணையின் ஆழம் -அந்த
கரங்களின் தழுவலில்
கரைந்தோடும் துயரம் .........

உம் கறைபடியா உடைக்கு-ஒரு
விலை மதியா உறவு-அது
இறைவனுக்கே மகிமை எனும் -நம்
இறைமகனின் உறவு.

வலிகளையே சுமந்து செல்லும் -நம்
வாழ்க்கைப் பாதையை
வழிப்படுத்தி விடுவதேனோ- உம்
இறை சிந்தனைகள் தான்.

துறு துறு எனத் துப்பறியும் -உம் பார்வை
துரத்தும் நம்மை
கடமையைத் தேடி
கடமை தவறாத கண்ணியத்தின் சோதரியே -நாம்
உமக்காக் கற்ற கல்லூரிக் கடமைகள்
எமக்காக இன்று உரித்தாகிப் போயின.

கன்னியர்மடத்தின் வளர்ச்சியின் நிமித்தம் -உம்
வார்த்தைகள் சிலநேரம் வலிமையாய் இருக்கும்
காலம் , கடமை கண்ணியம் , கட்டுப்பாடு
காப்பாற்றப்பட்டதற்கு நீரும் ஓர் காரணம்
இறைவனுக்காய் பல சேவைகள் புரிந்து -நீர்
சீரும் சிறப்பும் பெற்று
பல்லாணடு வாழ்க !

வாழ்த்துச் சொல்வதற்கோ- என்
வயது போதவில்லை- நான்
வாழ்த்தாமல் விலகிவிட உம்
சேவை இடம் கொடுக்கவில்லை.



போ.யசோ (ஆசிரியை)

# பணியிலும் திறனிலும் நிறைவு காண்பதில்...



இளமையில் பொறுப்புடன்...



இணையான நண்பர்களுடன்...




ஆசிரியத்துவ ஆற்றலுடன்...



அன்பொழுக ஆண்டவனைப் பாடுகையில்...



பட்டதாரியாய்ப் பரிணமிக்கையில்...



பிறநாட்டின் பெருமைகளில்...

# பல்வேறு பணிகளில் அர்ப்பணிப்புடன்...



ஆரம்பப் பிரிவின் ஆக்கத்திற்கு...



ஆங்கில தினத்தை ஆரம்பிக்கையில்...





மாணவ தலைவர்களுடன்...



பரிசளிப்பு விழாவில்...



கலையின் நிறைவில்...



விளையாட்டின் நிறைவில்...

# மணிவிழாக்காணும் அதிபர்

யா/திருக்குடும்ப கன்னியர் மடத்தில் அதிபராக இருந்து மணிவிழாக்காணும் அருட்சகோதரி தஸ்நெவிஸ் வடிஸ்லஸ் அவர்கள் தனது சேவைக்காலத்தில் ஆரம்பப் பிரிவு முதல் உயர்தரப் பிரிவுவரை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நலன்களில் மிகந்த அக்கறை கொண்டவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிர்வாகத்திறன் மிக்க அதிபர்களுள் ஒருவராகத்திகழ்ந்தவர். இவ்வாறான ஒரு நல்ல பாடசாலையில் கடமையாற்றுவது என்பது ஒருவரின் ஆளுமை வளர்ச்சியை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. இவ்வகையில் இவ்வாறான அதிபரின் கீழ்க் கடமையாற்றுவதை எண்ணி மகிழ்வடைகின்றேன். அதிபர் அவர்கள் கண்டிப்புடன் தவறுகளை உடனுக்குடன் சுட்டிக் காட்டித் திருத்தி விடுவார். கடமைகளை உரியநேரத்தில் முடிக்கவேண்டும் என்பதே இவரது நோக்கமாகும். ஒரு சிறிய விடயமாக இருந்தாலும் அதனைச் சரியான முறையில் நடாத்த வேண்டும் என்பதே அவரது விருப்பமாகும். ஆசிரியர்களும் மாணவர்களும் எந்தவேலையில் ஈடுபடும்போதும் நல் வழிகாட்டி யாகத் திகழ்வார். எந்தவொரு செயலையும் நல்ல முறையில் நிறைவேற்றும் செயற்றிறன் மிக்க அதிபர். இவர் தனது அர்ப்பண வாழ்க்கையால் தியான வழிபாடுகள், ஆன்மீக வழிகாட்டல்கள் என்பவற்றில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் இறைவனுடன் ஒன்றிக்க வைத்து நல்வழிகாட்டிகளாகத் திகழ வழிகாட்டியவர். தனது முகாமைத்துவத் தொழிற்பாடுகளால் எமது பாடசாலை பல உயர்ச்சிகளைக் காண வழிவகுத்தவர். இவர் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் மாணவர்கள் உள்ளத்திலும் ஆசிரியர்கள் உள்ளத்திலும் என்றும் நிலைத்திருப்பார். இவர் தனது ஓய்வுக் காலத்தில் இறைவனின் அருளுடன் என்றும் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**திருமதி ப. ஜெ. பற்றிக்,**
ஆசிரியர்,
யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்.

# உன்னத உயர்வை நோக்கிய உழைப்பு

பாடசாலையில் கற்றல், கற்பித்தல் நிறைவாக நடந்தேற வேண்டுமெனில் பொருத் தமான பௌதீக சூழல் அமையப் பெற்றிருப்பது அவசியமானதாகும். கல்விச் சாலை கவிநிலையுடையதாய் விளங்கு வதுடன் மாணவர் தடையின்றிக் கற்பதற்குப் பொருத் தமான அக - புற வய சூழல் அமைப்பும் இயைபுடையதாய் காணப்பட வேண்டும். எமது யாழ். திருக்குடும்ப கல்லூரி கடந்த நூற்றைம்பது வருடகாலமாக இத்தகைய பண்புகளைக் கொண்டமைந்து நாட்டில் தனக்கென ஒரு தனிமுத்திரை பதித்து நின்று வருகின்றது. இதற்கு எமது பாடசாலையைக் கட்டிக்காத்து நிர்வகித்து வந்த திருக்குடும்ப கன்னியர்களான ஒவ்வொரு அதிபர்களதும் அர்ப்பணிப்பு மிக்க தன்னலம் கருதா சேவையே காரணம் எனக் கூறின் அது மிகையாகாது.

இந்த வரிசையில் கடந்த ஏழு வருடங்களாக எமது பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி 31.01.2011இல் ஓய்வு பெற்ற அருட்சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ் லொஸ் அவர்களின் பங்களிப்பும் அளப்பரிய தாகும்.

கடந்து சென்ற மூன்று தசாப்தங்கள் எமது நாட்டின் கறைபடிந்த காலப்பகுதி யாகும். இதிலும் எமது பிரதேசம் யுத்த மேகத்தால் சூழப்பட்டு மனித வாழ்வின் இயல்புநிலை மாறிக்கிடந்த காலமதில் பாடசாலையில் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அருட்சகோதரி அவர்கள் பாடசாலையின் கட்டுக்கோப்புக் குலையா மலும், அதன் தனித்துவம் குன்றாமலும் இருந்த வளங்களைப் பாதுகாப்பதிலும், புதிய வளங்களைத் தேடிக்கொள்வதிலும் முனைப் புடன் செயற்பட்டுக் கண்ட வெற்றி களின் சுவடுகளாக இன்று எமது கல்லூரியின் வளப்பரிணாமவளர்ச்சி காணப்படுவது கண்கூடு.

கல்வி மேம்பாட்டையவும், கற்றல், கற்பித்தல் நடையின்றி நிறைவேறவும் பாடசாலையும் வகுப்பறைகளும் கவிநிலையுடையதாக இருக்க வேண்டும் என்பது புதிய கல்விச் சீர்திருத்தத்தில் வலியுறுத்தப்பட்டுவரும் ஒரு விடயமாகும். இந்த வகையிலே அதிபர் அவர்கள் அவர்களது முயற்சியால் கல்லூரியின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள கட்டடங்கள், வகுப்பறைகள், பாடசாலை யின் சுற்றுப்புற மதில் ஆகியவை வர்ணம் பூசப் பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளமை பாடசாலைக்கு புதுப்பொலிவைத் தந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்னும் மாணவரிடையேயும் அழகுணர்வைத் தூண்டி பாடசாலைச் சூழலை அழகுபடுத்துமுகமாக பூச்சாடிகளில் அழகிய மலர்ச் செடிகளை மாணவர் மூலமாக உருவாக்கியதுடன் அதைப் பராமரித்துப் பேணி நின்றதில் மாணவரின் பங்கைவிட அதிபர் காட்டிநின்ற அக்கறை அதிகமாக காணப் பட்டது. இன்றும் அம்மலர்ச்சாடிகள் கல்லூரி வைபவங்களின் போது அலங்கரிப்பு சாதனங்களாக மிளிர்வதும் அதிபரவர்களின் முயற்சியின் பலனேயாகும்.

மேலும் பாடசாலைக்கு அரும்பணி யாற்றிச்சென்ற பழைய அதிபர்களை

கௌரவப்படுத்தும் முகமாக பாடசாலையின் கட்டிடங்களில் அவர்களது பெயர்களைப் பொறித்துள்ளமையும், பாடசாலையில் பணியாற்றிய அதிபர்கள், பிரதி அதிபர்கள், மாணவ தலைவர்கள், எமது பாடசாலையில் நீண்டகாலம் பணியாற்றி வெள்ளி விழாக் கண்ட ஆசிரியர்களின் பெயர்கள் பொறிக்கப் பட்ட பதாகைகள் அதிபர் அவர்களாலேயே அமைக்கப்பட்டுமுள்ளன. இவை நீண்ட காலத்துக்கு எமது பாடசாலை பற்றிய தகவல்களை எதிர்கால சந்ததிக்கு வழங்கும் மூலங்களாக அதிபரவர்களது பெயர் சொல்லி நிற்கும் என்பது உண்மை. மேலும் பாடசா லையின் நுழை வாயில்கள் இரண்டுக்கும் புதிய கதவுகள் அமைக்கப்பட் டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வகுப்பறைகளில் மாணவர்களது கற்றற் செயற்பாடுகள் சீராக நடைபெறு வதற்குத் தளபாடங்கள் சீராக அமைந்திருக்க வேண்டியது அவசியமானதாகும். மிகவும் நீண்டகால யுத்த அனர்த்தங்களும், பொருளா தார தடைகளும், இடப்பெயர் வுகளும் அடிக்கடி எமது பாடசாலை வகுப்பறைகளை அயற்சூழலிலுள்ள மக்கள் தங்கும் முகாங் களாக மாற்றியதனால் பொலி விழந்தும், சிதைவடைந்தும் காணப்பட்ட தளபாடங் களால் வகுப்பறைகள் ஒழுங்கீன மான அமைப்புடன் காணப்பட்ட நிலையிலே அதிபர் அவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு மாணவர்ளுக்கும், ஆசிரியர் களுக்கும் ஒழுங்கான கதிரை மேசைகளைச் சீர்செய்து பூச்சிட்டும் இன்று சகல வகுப்புகளிலும் பொருத்தமான கதிரை மேசைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனை பக்குவமாகப் பராமரித்துவரும் பணியினால் அவை மாணவர்களது கிறுக்கல்களுக்கோ, கீறல்களுக்கோ உட்படாது உள்ளமையை இன்றைய சூழலில் பாராட்டாமல் இருக்க முடியாது.

மேலும், நவீன மயப்படுத்தும் நோக்குடன் கலை நிகழ்வுகளும், பாடசாலை வைபவங்களும் நடைபெறும் பிரதான மண்டபமும், மேடையும் மின் இணைப் புக்கள் சீர் செய்யப்பட்டு, மின் விசிறிகள் பொருத்தப்பட்டதுடன், புதிய திரைச் சீலை; விருந்தினர் அமர்வதற்கான கதிரைகள், பார்வையாளர் அமர்வதற்கான பிளாஸ்ரிக் கதிரைகள் எனப் பாடசாலைக்கென வளம்பல சேர்த்துள்ளார்.

இன்னும் அதிபர் அலுவலகம் திருத்தி அமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தும் நோக்குடன் புதிய தளக்கற்கள் பதிக்கப்பட் டுள்ளதுடன், திரைச்சீலைகள், தளபாடங் களும் புதுப்பிக்கப்பட்டு இன்று சிறப்புடன் காட்சியளிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நவீன கல்விச் சிந்தனையில் உருவான புதிய கல்விச் சீர்திருத்தம் மாணவர் மையக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட தாகும். மாணவர் தேடி அறிந்து கற்பதற்கு நவீன தொழிநுட்ப சாதனங்கள் அவசிய மானதாகும். இதற்கான வளங்களை சேர்ப்பதிலும் அதிபரவர்கள் அக்கறையுடன் செயற்பட்டதன் விளைவாக நவீனமயப் படுத்தப்பட்ட இரண்டு கணனி அறைகளும், அதற்கான காரணிகளும், தளபாடங்களும் இன்று பாடசாலையின் மாணவர்கள் அனைவரும் பயன்பெற வழிவகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்னும் அதிபரவர்களது முயற்சி யினால் அமைக்கப்பட்டுள்ள நவீன மயப்ப டுத்தப்பட்டுள்ள பௌதீக விஞ்ஞான கூடமும், புதிதாக அமைக்கப்பட்ட பொது

விஞ்ஞான கூடமும் இவரது செயற் திறனுக்கு சான்றாகும். இன்னும் மாண வர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு வசதியாக சகல பகுதி களுக்கும் நவீன கற்றல் கருவிகள் (O.H.P., Multi. Media) பொருத்தப்பட்டு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன், போட்டோ பிரதி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட் டுள்ளன.

இடநெருக்கடி எமது பாடசா லையின் மிகப்பெரிய சவாலாகும். இதற்கு மத்தியில் தேவைகளைப் பூர்த்தி செய்வ தென்பது மிகவும் சிக்கலான விடயமாகும். இவர் பாடசாலைகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு, கலந்துரையாடல்களுக்கென ஒரு இடத்தை ஒதுக்கி அமைத்தும், ஆண் ஆசிரியர்களுக்கான ஒரு ஓய்வறையையும், அதனுடன் கூடிய வகுப்பறையையும் புதிதாக அமைத்து நெருக்கடிகளைத் தீர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்னும் மாணவர்களது ஆங்கில அறிவை மேம்படுத்தும் முயற்சிகள் இவரால் பலவழிகளில் முன்னெடுக்கப்பட் டுள்ளன. இதன் பயனாக நலன்விரும்பி ஒருவரின் அனுசரணையுடன் வகுப்பறை ஒன்று ஆங்கில செயற்பாட்டறையாக உருவாக்கப்பட்டு இன்று மாணவர்களது பயன்பாட்டில் உள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

இன்று பாடசாலைக்கென ஒரு முச்சக்கர வண்டி ஒன்று இவரது கடும் முயற்சி யின் பயனாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள் ளமையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இன்னும் இவர் மாணவர்களது மட்டில் இவர் காட்டிய அக்கறையும், பரிவும் காரணமாக இவர் மேற்கொண்ட முயற்சிகள் தனித்துவமானவையாகும். இவர் எப்போதும் வளம் குன்றிய மாணவர் மட்டில் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வந்தமை இவரிடம் காணப்பட்ட சிறப்புக்களில் ஒன்றாகும். சகல வகுப்புக்களிலும் இத்தகைய மாணவர்களை இனம்கண்டு அவர்களது தேவைகளை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்வதில் கூடிய அக்கறையுடன் இவர் செயற்பட்டுள்ளார். மனித நேயத்துடன் மேற்கொண்ட இவரது முயற்சிகளால் பெருமளவு மாணவர்கள் பயனடைந்தமை வெளிப்படையாகும்.

தலைமைத்துவத்திற்குரிய கண்டிப் புடன் கனிவுள்ளம் கொண்டு செயற்பட்ட அதிபரவர்கள் மூலம் இக்கல்லூரி பெற்றுக் கொண்ட நன்மைகள், வளங்கள், இறை யாசிகள் அனைத்தும் எதிர்வரும் காலத்தில் உணரப்படும் என்பது உறுதியாகும். இதற்காக இவர் வெளிநாடுகளிலுள்ள பழைய மாண வர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் போன்ற பல்வேறு துறையினூடாகப் பெற்றுக் கொண்ட நிதியுத விகளைத் தூர நோக்குடன் சிந்தித்து சரியான முறையில் அவற்றைச் செலவிட்டமை இவரின் சாதனையான செயற் பாடாகும்.

"துன்பம் உறவரினும் செய்க, துணிவு ஆற்றி
இன்பம் பயக்கும் வினை"

என்பது இவரது செயற்பாடுகளினூடாக உணரப்படக்கூடிய பண்பாக விளங்கியது. எதிர்கால நலன்கருதி இவர் மேற்கொண்ட சகல முயற்சிகளும், அதற்கான இவரது ஒய்வற்ற உழைப்பும் நிச்சயம் எதிர்வரும் காலத்தில் இவர் பெயர் சொல்லும்.

திருமதி. ஜெ, சிறிஸ்கந்தராஜா,
(ஆசிரியர்)

# எமது அதிபர் !

கற்பித்தலைக் கற்றுக் கொண்டிருக்கும் நான் முதன் முதலாகத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் காலடி எடுத்துவைத்தபோது என் இதய அறைகளிற்கு இலை துளிர் காலம்..........

என்னை வரவேற்ற கரங்களின் உடையும் தூய்மை. அவர் உட்காரச்சென்ற இடமும் தூய்மை. இங்கு வளர்கின்ற மரங்களின் தன்மையோ பசுமை, வழிநடாத்தும் ஆசிரி யர்கள் பழகுவதோ இனிமை. தூய்மைக்கும் வறுமைக்கும் துளி கூடத் தொடர்பில்லை எனத் தொட்டுக்காட்டுவது மாணவ மணிகளின் வெள்ளைச் சட்டையுடன் காலுறையும் சப்பாத்தும் ."கந்தையானாலும் கசக்கிக்கட்டு" எனன் கற்றுக் கொடுத்தது நம் கல்லூரி அதிபர்.

பாடசாலைத் தலைவியாய் நின்று மாணவிகளின் ஒழுக்கம், கடமை, கட்டுப்பாடு என்பவற்றை மிகவும் சிறப்பான முறையில் கட்டிக் காத்து வந்தவர் நம் திருக்குடும்பத்தின் கல்லூரித் தலைவி. இறைசிந்தனையை உருவாக்குவதில் மட்டுமல்ல உதவுகின்ற மனப்பான் மையை வளர்ப்பதிலும் கூட முன் மாதிரியாய்த் திகழ்ந்து பிறர் தாமே முன் வந்து அவர் வழி தொடரவைப்பவர்..

குறிப்பிட்ட வேலையைக் குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதும் பூர்த்தி செய்ய வைப்பதுவும் எம் அதிபருக்கு மிகவும் கைவந்த கலை . நிர்வகிப்பும் ஒழுங்கமைப்பும் திட்ட மிட்டுச் செய்வதில் மிகவும் திறமைசாலி. கடினமான தொனியில் கடமைகளை உணர்த்தி விட்டு சாந்தமாகி விடுவார் மீண்டும் சந்திக்கும் போது........

இவரின் சேவைகாலத்தில் நான் பணி யாற்றி இருந்ததால் என்கற்பித்தலில் பலவற் றைக் கற்றுக் கொண்டுள்ளேன்.

காலங்கள் உருண்டாலும் இவரின் சேவைகள் எப்பொழுதும் திருக்குடும்பம் மதிக்கும் சிறப்பான காவியம். எம் அதிபர் ஓய்வுகாலத்திற்காய் எமைப்பிரிந்து சென் றாலும் மேலும் பதவியுயர்வுகள் பெற்று சீரும் சிறப்புடன் இறைசேவையைத் தொடர வாழ்த்தி நிற்கும் இவள்.

செல்வி . யசோதா யோகேஸ்வரி
(ஆசிரியை)

# பிரியாவிடை கொடுங்கள்

கல்விச் சேவைக்கு முடிவுரை எழுதிட
காலம் தான் நினைக்கின்றதோ?
குறைந்து விடுமோ ஆறு வருட நிலவின்
பௌர்ணமி வாசம்...
பள்ளி ஒரு வனம் என எண்ணிய எமக்கு
அதை நந்தவனமாக்கிய தேவதை நீங்கள்தான்..

பள்ளி வானில் எத்தனை நட்சத்திரங்கள்
பளிச்சென தெரியும் தாயே,
நீங்கள்தானே எமக்கெல்லாம் நிலா
மனதின் நிறத்தை ஒத்த ஆடை அணிந்து
மந்திரப் புன்னகை பூண்டு,
உள்ளங்களை ஊடுருவும் பார்வை கொண்டு,
தாங்கள் உலா போனது மைதானத்தில் மட்டுமல்ல,
நம் மனங்களிலும் தான்..

கம்பீரத் தோற்றத்தால் நீர் சிரித்திட மறந்தாலும்
கள்ளமில்லா புன்னகையால் நாம் சிறைப்பட்டு போனதுண்டு,
உம் அரவணைப்பில் வளர்ந்திட்ட மனங்கள் பல
இன்னும் தாங்கி நிற்கின்றன, பசுமையான உம் நினைவுகள் சில
ஒவ்வொரு உள்ளங்களினதும் அசையாத ஆசை
எந்நாளும் நீங்கள் பிரியாமல் விடை பெற வேண்டுமென
எம்மை சிகரம் ஏற்றி வைத்த தாயே
உயரம் சென்றாலும் எம் உள்ளத்தில் நீங்கள் இருப்பீர்கள்

எம்முடனே தங்கி விடச் சொல்ல
எங்களுக்கும் பேராசை தான்,
யாம் பெற்ற இன்பம் பெறுக வையகம்
என்ற கோட்பாட்டில் கொஞ்சம் பெருமைதான்
தங்கள் சேவை என்றும் தொடரட்டும்
பலரின் தேவைகள் உம்மால் நிறையட்டும்.

பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் பல மாற்றங்கள் செய்த
நீங்களும் ஒரு மாயாவி தான்
உறங்கிக் கொண்டிருந்த பெண் நெஞ்சங்களை



FAMILY CONVENT
LIBRARY
DATE:
NATIONAL SCHOOL JAFFNA

தட்டி எழுப்பிய நீங்களும் நவீன பாரதிதான்
மாறுபட்ட எண்ணங்களால் வேறுபட்ட வண்ணங்கள் தந்த
தாயே நீங்களும் ஓர் கண்ணதாசன் தான்

பழம் நழுவிப் பாலில் விழுந்ததை படித்ததுண்டு
எம் மனம் நழுவி உங்கள் அன்பில் விழுந்ததால்
அறிந்தோம் அதன் அர்த்தம் இன்று…
எம்கூடவே இருந்து ஒளி கொடுத்ததில்
மெழுகுவர்த்தி நீங்கள்
எம்மை விட்டு தள்ளி போனாலும் மணம்பரப்பும்
ஊதுபத்தி நீங்கள்

தாயே உம் வாசம் இங்கு வாசமானதால்
குழந்தைகள் எமக்குக் கல்வியே சுவாசமானது
தங்களின் சொல்பட்டதால் நம் கண்ணாடி மனங்கள்
உரசப்பட்டது. பளிங்காவதற்கு
தங்கள் விரல் தொட்டதால் நட்சத்திரக் கற்கள்
கலங்கியதுண்டு சூரியச்சிலையாவதற்கு
தங்கள் சொல்பட்டு பளிங்காக, விரல்பட்டு சிலையாக
தூரத்தில் காத்துக்கிடக்கின்றன இன்னும் பல நட்சத்திரங்கள்

மாண்பு மிகு அதிபரே
எங்கள் அன்பின் விண்ணப்பம்
மாற்றம் என்ற சொல்லை விட
உலகில் எல்லாம் மாறிவிட்டது
நீங்களும் அடிக்கடி இடம்
மாற்றிக் கொள்ளுங்கள்
இன்னும் மாறாமல் இருக்கும்
சிலவற்றை மாற்றியமைக்க…

தேங்கிக் கிடந்த எம் அன்பு
கவிதையாய் காகிதத்தை அலங்கரிக்கிறது
தாயே உமக்கொரு கவி என்றதும்
தானாக சரணடைந்தன புவியிலுள்ள
வார்த்தைகள் பல…
பேனா மை கொண்டு, வார்த்தைப் பூக்களை
கோர்த்து வைத்திருக்கிறேன், இந்நூலில்
தாயே உமக்கு சூட்டி விட…

***Kanuja Antony***
***2010 Com.***
***Assistant Head Girl***
***(Prefect 2010)***

# கவிதைக்கே ஒரு கவிதை...



வால்வெள்ளி வானத்தில் தோன்றியது போல
வசந்தமதை மாணாக்கர் வாழ்வில் சேர்க்க
வந்தனையோ திருக்குடும்பத்திற்கு
வருடமாம் பார்த்திபத்திலே

புதிய மேய்ப்பனொன்று கிடைத்ததனாலே
மகிழ்ந்திருந்தோமே யாம் ஆறு ஆண்டுகள்
பாடங்கள் பல கற்றுக்கொண்டோம் தாயே - உம்
பாதையில் பயணம் செய்ததாலே

புதிய மேய்ப்பனாக நீவீர் கிடைத்தது - வெறும்
மகிழ்வென்று மட்டும் கூறிவிட முடியாது
எம் கல்லூரி செய்த பாக்கியத்தின் விளைவே
கன்னிகையாம் நீவீர் பரிசாய்க் கிடைத்தது

நாட்டிற்கொரு அரசன் போல
வீட்டிற்கொரு தலைவன் போல - எம்
பள்ளியை நல்வழி நடத்தினீரே
நல் அரசியாயும் தலைவியாயும் அமர்ந்து

விழியசைவில் வலைவிரிப்பவர் பலரென
யான் கேள்வியுற்றேன் இவ்வுலகில் - ஆனால்
ஆங்கிலப் பேச்சினால் வலையில் வீழ்த்தும்
மாதிறனை உம்மிலே தான் கண்டேன்

சாதனைகளின் சாட்சியாய்த் திகழ்ந்த - எம்
கல்லூரிக்குத் தேசிய கல்லூரி எனும் உயர்வு
உம் ஆட்சியில் கிடைத்த
பேரதிஷ்டங்களில் பெரியதே.

சோதனை என்ற சொல்லைத்
துடைத்தெறிந்து விட்டு
சாதனையாய் அதை மாற்றிக் காட்டும்
சாதுரியம் உம்மிடமுள்ள தனிச்சிறப்பே
வயதிலே சற்று முதிர்ச்சி கண்டாலும்

தளர்வோ சற்றுமின்றி எதையும்
துரிதமாய்ச் செய்யும் துணிச்சலைத்
துல்லியமாய்க் கண்டது உம்மிலேதான்

உரையேதும் ஆற்றுவதென்றால்
உம்மிடம் தான் கேட்க வேண்டும்
ஏழையர்க்கு உதவுவதென்றால்
ஏனையோர்கள் உம்மைத் தாண்டிடார்.

விருந்தினரை வரவேற்பது எப்படியென்றும்
சென்ற இடத்தில திகழ்வது எப்படியென்றும்
தனிப்படையாய் உம்மிடம் யாம்
கற்ற விடயத்திலே ஒன்று

கண்டிப்பு உம்மிடத்தே
கடினமாக இருந்தாலும்
கனிவுள்ளம் உம்மிடத்தே
குறையின்றிக் குடியுள்ளது.


சிரிப்புடனே சில விடயத்தை - எம்மைச்
சிரிக்க வைக்க நீர் சொல்வது - எம்மைச்
சிரிக்க வைப்பது மட்டுமன்றிச்
சிந்திக்கவும் வைக்கிறதே.

உம்சேவை எம் பள்ளியில்
தொடர வேண்டும் என்பதே
எம் ஆசை - எம் ஆசை நிறைவேற
எமக்காய் வேண்டிடும் இறைவனை!

ஜெலானி அன்ரன் ஜெயந்தராசா
க.பொ.த உயர்தரம்
கலைப்பிரிவு (2011)


# அதிபர் தாயே வாழியவே!

அன்பும் அறிவும் நிறைந்தவராம்
அருட்சகோதரி எங்கள் அதிபர் ஆவர்
ஆண்டவர் தோட்டத்திலே மலர்ந்தவர் தான்
அவருக்கே தன்னை அர்ச்சனை ஆக்கியவர்
துறவற வாழ்வே தூயது என்றும் தூயவர்
வாழ்வை தெரிந்து கொண்டார்
ஆண்டவர் யேசுவின் முன்பள்ளியில்
ஆசிரியப் பணியைத் தெரிந்தெடுத்து - அவர்
பணிவாழ்வைத் தன் வாழ்வாய் மாற்றியவர்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கல்வி
கலைகள், விளையாட்டும் ஒருங்கே
கல்விச்சாலை மேலோங்க
அல்லும், பகலும், உழைத்து வந்தார்
உயர்ந்த இலக்கை கொண்டவர் தாம்
உயர்ச்சிகள் பலவும் பெற்றவர் தாம்
பள்ளிப் பணியில் பல கடமை பாங்குடன்
சேவை செய்து வந்தார்
யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடத்தை
தினம் நினைந்து - திட்டங்கள்
பலவும் வரைந்து வைத்தார்
தேவன் உள்ளம் கனிந்ததால்
தேசிய பாடசாலை என்றும்
உயர் தரம் இன்று பெற்றதுவே
பள்ளிப் பணியை முடிக்கும் எங்கள்
அதிபர் தாயே வாழியவே!



J. டயானா,
2012, கலைப்பிரிவு |

# REV. SR. NEVIS
# WE LOVE AND THANK YOU



REV. Sr Nevis Ladislaus,-You,
the brisk woman in the world
who almost stood alone to
uplift our school family.

Every minute in the past six years
seems to be a Golden era to us.
We can't see anyone like you
Nobody can be replaced for y ou

Victory sprang up like millions of fountains
since 2005 till now.
Marvellous achievements are the valuable
worthy wages for your dedicated service.

Scenes acted in our drama
are moulded with your loving hands
after competitions over midnights
you came to be with us, really shows your love.

'Ready to work for God "at any time" is
your alma mater, How pure, how humble,
How simple and pious you are in your life
It's our fortune to get you

Not only you taught the morals
with your numinous life.
But also we, your children understood
the art of greeting with your loving advices.

**E**very time you worked , taught and wished
for the welfare of our schrod.
Even at night you walked around
the school to check, like an eagle.

**V**aluable gift is you to us.
we are very sad to leave you.
Your concern, kindness cleanliness
created skillful students

**I**n every fields of our school, you have
played a great role.
you have lead all of us
to great success.

**S**ister, you are not only a principal
but a friend in need.
You made tours happier by loving
sweet songs and hospitality

**W**e are your loving children
Work harder to bring your
lifetime dreams come true, and
always be greatful and thankful for you.

**E**ven you beated, scolded
It is for our good , we know
how can we reward you?
Your love for US is unlimited.

**L**oving mother -you
resembles "Mary " as your name too.
From the first day till now,
you are perfect , flawless with your duties.





**O**h, It is heart breaking for
a child to leave its mother
now every one is encountering
this unbearable tragedy.

**V**irgin mary will bless you
Jesus will lead you to eternal life
we'll pray for your good health and
You are a wealth to us

**E**ducation is a gift to you
by our heavenly God
your speeches and thought for the days.
in every morning are wonders.

**A**t the first glance one could understand
only your strictness and disciplined life
but no baby could see the immense love
hidden in your deep heart's core better than us

**N**one of us can forget you
you are an excellent person we thank
and praise you, we want you
and love you.

**D**elight ful smiles of you never be
forgotten . they made every one
who meet you understand your
wide mind with concern.

**T**hank you sister we can only wave
a good bye but your
remindful activities are still
warring in our heart.

**H**ope is the only we have now
we hope you will come
and help us in our needs always
we need your advice.

**A** great acquisition to our school
is you worked hard to uplift
the everlasting trophy for your devotion is the
promotion of our school as "Nation al school"

**N**oble sister your hard work in every actions
True love you shared with us
Thoughtful words you taught us
make all of us to praise you.

**K**udos you brought to our family
are unforfeitable whole society
and we are difficult to depart from you.

**Y**our curiosity and careness on the sports
are remembered via the hard
attempts you have done to buy a
playground.

**O**ath you promised while you
enter religious life as a
nun of Holy family convent
you did enormous services to the Holy family

**U**nbreakable bond between you and us
can never be broken
unforgettable memories tell of days
in goodness spent.



11[A] Students
2010

# From my Heart



The day is bright
And the sunshine peeps in
Our Principal M.T. Ladis laus
Came to Our School.
We were happy that you came to H.F.C
Now our eyes are crying Out
To see your face in distance.
Our Lord made a path for us
using the love and affection.
Day and night with your Sprit
You worked hard for the School
You are a Supporting shoulder
and a supporter to our school
As a Plant has a relation with its seed.
in the same way
you relates with us
we hope dear sister
That you have enjoyed this period of school time
and remember it thought out your life
Now we'll only say
It's like a mother's love that outs of limits
you are a precious as diomond
As sweet as nectar.
But now you are growing old
but now also you are as pure as gold.
and now we all from the bottom
If our heart say thankyou
For the roses that you have bloomed here

*by*
***Mary Sugeepa Kanikkainathan***
***2011 com***

# இயலாமையில் வருந்துவோருடன் உடனிருப்பவர்

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் சமூகமென சகலரது அன்பையும், பெருமதிப்பையும் பெற்று எம் கல்விச்சாலையில் பல்வேறு சாதனைகள் படைத்திட வழிகாட்டி, வரலாற்றில் தடம்பதித்து பணிஒய்வு பெறும் எம் இனிய அதிபர் அருட்சகோதரி லடிஸ்லோஸ் தஸ்நெவிஸ் அவர்களை ஆசிரியர் நலன்புரிக்கழகம் சார்பில் நன்றியுடன் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். இன்று எம் பாடசாலை தேசிய பாடசாலையாக உயர்வடைய அதிபர் அவர்களின் விடாமுயற்சியும் அவர் தலைமையில் நாம் ஈட்டிய கல்வி இணைப்பாடபேறுகளும் தான் காரணம். எம் கல்விச்சாலை ஒழுக்கமிகு கல்விப் பாரம்பரியத்தை முன்னெடுப்பதில் அவர் பங்களிப்பு அபரிமிததமானது. எந்த விடயமென்றாலும் அதில் தன் முழுமையான அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பை நல்கி எல்லோருக்கும் முன்னுதாரணமாகத்திகழும் எம் அதிபர், அதே அர்ப்பணிப்பு மிகு பங்களிப்பை யாவரும் நல்க வேண்டும் என்ற பேராவல் மிகுந்தவர். ஆயினும் பிறர் உணர்வுகளை மதித்து துயரத்திலும், இயலாமையும் வருந்துவோருடனும் என்றும் உடனிருப்பவர். ஒவ்வொரு ஆசிரியர், மாணவர் நலன்களையும் முதன்மையாக சிந்திப்பவர். சமூகத்துடனும் அயற் பாடசாலைகளுடனும் நல்லுறவைப்பேணி சமூக எதிர்பார்ப்பிற்கேற்ப கல்விச்சாலையை வழிநடத்தியவர். எம் பாடசாலையின் பெருமைகளைத் தன் அறிவு, ஆற்றல், ஆளுமையால் மேம்படுத்திய அதிபர் அவர் தன்னகத்தே பல்வேறு புலமைகளையும், ஆற்றல்களையும் கொண்டவர். தன் பட்டப்படிப்பில் முதன் வகுப்பில் சித்தி பெற்ற அவர் கல்வியல் பட்டக்கற்கையிலும், முது தத்துவமாணி கற்கையிலும் விசேட சித்திபெற்ற பெருமைக்குரியவர். அவரின் பன்மொழியாற்றலும், பண்ணிசையாற்றலும் அவரின் ஆளுமையின் சிகரங்கள். இத்தகைய ஆற்றலும், அறிவும், ஆளுமையுமிக்க ஒருவர். எம் கல்விச்சாலையின் அதிபராக கடமையாற்றியது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். அவரது விருந்தோம்பல், பண்பு, ஆழமான இறை விசுவாசம் எம் அனைவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். எம் எல்லோரையும் ஓர் குடும்பமாக வழிநடத்திய எம் அதிபர் தன் பணி ஓய்வு காலத்தில் நல்ல ஆரோக்கியத்துடன் திகழவும், தன் அறிவு, ஆற்றல், ஆளுமையை சமூகப் பணிகளில் ஈடுபடுத்தவும் இத்தருணத்தில் இறையாசி வேண்டுகின்றோம்.

திருமதி சா. தர்மராஜன்,
தலைவர்

திருமதி கி.அ.அன்ரன்
செயலாளர்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்.

# வாழ்த்துப் பாமாலை.

ஆண்டவனின் அடியவளாய் ஆனபணி ஏற்றுநின்று
நீண்டதொரு அனுபவமாய் அவனியிலே ஆற்றிவென்று
வேண்டுமுயர் அறிவொளியை கன்னியரின் மடத்தினிலே
தூண்டிவைத்த அன்னையிவள் ஓய்வினிலும் ஒளிபெறுக !

ஐம்பதாம் ஆண்டினிலே லடிஸ்லாஸ் பிலோமினா
தம்பதியர் அருமகளாம் தஸ்நேவிஸ் தங்கையிவள்
செம்பியன் பற்றினிலே உடன்பிறப்பு ஐவருக்குள்
செம்மையுற மூன்றாம்நற் புத்திரியாய் அவதரித்தார்.

செம்பியன் பற்றினிலும் பாசையூர்ப் பதியினிலும்
நம்பைக் குளமகளீர் கல்விச் சாலையிலும்
தம்மினிய கல்வியினைப் பாங்குடனே கற்றுவென்று
அம்மணியும் பல்கலையின் கழகமதில் தான் புகுந்தாள்.

கலைமாணிப் பட்டமதை முதற்றரமாய்ப் பெற்றதுடன்
நிலையான கல்வியியல் டிப்ளோமாப் பட்டமுடன்
விலையேறும் மெய்யியலில் முதுமாணிப் பட்டமென
மலைபோல அறிவியலில் பலவளமும் பெற்றுயர்ந்தாள்.

வேதவிவிலிய கல்வியிலும் உளவியற் துறையிலும்
ஓதுமுயர் தகைமைபெற்று உத்தமியாள் உயர்ந்து நின்றாள்
கீதமது தானிசைக்கும் வல்லமையும் தானடைய
கோதையிவர் சங்கீதக் கலையினிலும் தனையிணைத்தாள்.



துறவறத்தின் தூய்மையினுள் தன்னையே அர்ப்பணித்து
அறமுரைக்கும் பணியினிலே ஆர்வமுடன் வழிநடந்து
திறமுடனே பாரினிலே கன்னியிவள் துணிந்துசெய்த
சிறப்புறுநற் பணியனைத்தும் செப்புதற்கு வார்த்தையுண்டோ ?


மறைக்கல்வி முன்பள்ளி வழிபாடு பங்கு என்று
துறைகண்ட பணியனைத்தும் ஆர்வமுடன் ஆற்றிநின்று
கரைகண்ட கன்னியவள் கல்வியிலே தடம்பதித்து
முறையுடனே கிளிநொச்சி யாழ். மண்ணில் பெயர் பதித்தாள்.

ஆண்டுகளோர் எட்டுளங்கள் கன்னியரின் மடத்தினையே
ஆண்டுநின்று எட்டாத பணிபலவும் முடித்து வென்று
நீண்டதிருப் பயணமதில் கல்விதனை உயர்த்திஇன்று
தூண்டி எரி விளக்காக எம்முன்னே தானொளிர்ந்தாள்.

அன்பினிலே அன்னையென அணைப்பதிலே தந்தையென
பண்பினிலே சிகரமென இரங்குவதில் பாரியென
படிப்பினிலே குறைவென்றால் தண்டிக்கும் கடுமையென
அடிப்படையில் எல்லாமே கொண்டவளெம் தாயிவளாம்.

ஆதிபிதா தேவசுதன் தூயாவி துணையிருந்து
ஆனவளம் தேகசுகம் தானருளத் தூயவளை
ஆண்டுபல தானிருந்து தரணியிலே வாழ்கவென
திருக்குடும்பக் கன்னியரின் குடும்பமின்று வாழ்த்துதம்மா !

பாடசாலைச் சமூகம்.



# விடை தந்து வாழ்த்துகிறோம்....

விண்ணவர்க்கு வாழ்வீந்து
வெள்ளைத் துகில் பூண்டு
கண்ணான சேவைகளில்
நின்னைக் கரைத்தவளே.

திருக்குடும்ப மடமென்ற
அருங்குணத்தோர் பள்ளியிலே
பெருங்குணத்தோடெழுந்து வந்து
பேறுயரப் பணிபுரிந்தீர்.

ஏழாண்டு பணி செய்து
ஏற்றங்கள் பல கண்டு
தாழாது கல்வியதை
தழைத்தோங்க வழிசெய்தீர்.


கண்டிப்பு கருணையென
கண்கள் இரண்டு கொண்டு
கல்வியின் கருவறையை
கருத்துடனே காத்து வந்தீர்

கல்வி கலை கேள்விகளில்
கல்லூரி தானுயர்ந்து
எல்லோரும் ஏற்றமொழி
பேச வைத்தீர் பெருந்தகைநீர்

அகவை அறுபதும்மை
அழைத்துச் சென்றிடினும்
அளப்பரிய நின் சேவை
இழப்பாகாது இப்புவியில்

ஆண்டவன் பணிகளுண்டு
அழைக்கின்ற களங்களுண்டு
அங்கெல்லாம் பணிதொடர
அன்போடு வாழ்த்துகின்றோம்.

விழுதுகளாய் நின்று
விடைதந்தோம் இன்று
நலமோடு நீடு நாள்
வாழ இறை வேண்டல் செய்வோம்.




யோ.யோ.ராஜ்குமார்,
ஆசிரியர்

## நன்றிகள்

ஏழு வருடங்கள் ஏற்றமுடன் பணிசெய்த எமது முன்னாள் அதிபர் அருட் சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் அவர்களின் சேவை நயப்பு மலராகிய இவ் "***ஒளிர்வு***" மலருக்கு, மனமுவந்து வாழ்த்துக்களை தந்தவர்களுக்கும், ஆக்கங்களை தந்தவர்களுக்கும், நிதி உதவி புரிந்தோருக்கும், அழகுற அச்சேற்றித்தந்த "கரிகணன்" பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

**மலர்க்குழு**



மன்பதை காக்கும் மறையவன் பணிக்கெனத்
தன்னையே தந்திட்ட தகுதியால் - அன்னைபோல்
ஆசிரியம் மேற்கொண்ட திபருமாகி நின்ற
மாசிலாய் வாழ்க பல்லாண்டு!



Harikanan, Jaffna.